# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014*, நவெம்பர் மாதம் 07 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *116.00*** **தபாற் செலவு : ரூபா *70.00***

**2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க,**
**இலங்கை அணுசக்திச் சட்டம்**

[*2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. 39/2011*

**இலங்கை அணுசக்தி சபையைத் தாபிப்பதற்கும்; தேசிய அபிவிருத்தி நோக்கங்களுக்காக அணு அறிவியல், மற்றும் தொழினுட்பவியலைப் பயன்படுத்துவதனை மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும்; இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தும் பேரவையைத் தாபிப்பதற்கும்; அயனாக்கற் கதிர்வீச்சையும் மூலங்களின் காப்பையும் பாதுகாப்பையும் உட்படுத்துகின்ற செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கும்; அணுவாயுதங்களைத் தடைசெய்வதற்கும்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும்; 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தை நீக்குவதற்கும், இவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*முன்னுரை.*

*இலங்கையினுள் தேசிய அபிவிருத்திக்காக சுகாதாரம், கைத்தொழில், சூழல் மற்றும் கமத்தொழில் என்பவற்றில் அணு அறிவியல் மற்றும் தொழினுட்பவியலை நன்மை பயக்கும் மற்றும் சமாதான முறையிலான பயன்பாடுகளுக்கு அனுமதித்தல் அவசியமாகியுள்ளதாதலாலும்:*

*அத்துடன் அயனாக்க கதிர்வீச்சு சம்பந்தப்பட்ட அனைத்து செயல்முறைகளை ஆளுவதற்கான நியமங்கள், உரிமமளித்தல் முறைமை, சோதனையிடுதல் மற்றும் வலுவுக்கிடுதல் முறைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட ஒழுங்குபடுத்தற் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தாபித்துப் பேணிவருவதன் மூலம் அயனாக்கற் கதிர்வீச்சிலிருந்து எழச் சாத்தியமான தீங்கு விளைவிக்கும் பாதிப்புக்களிலிருந்து தனியாட்களையும், சமூகத்தையும், சூழலையும் என்றென்றும் போதியளவு பாதுகாத்தும் மற்றும் கதிர்வீச்சு மூலங்களைக் காப்பதற்கும் பாதுகாப்பதற்கும் ஏற்பாடு செய்வது அவசியமாகியுள்ளதாதலாலும்:*

அத்துடன் இலங்கையில் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள இயைபான சர்வதேசச் சாசனங்களின் கீழ் குறிப்பாக அணுவாயுதங்கள் பெருகுதலை தடுத்தல் மற்றும் பாதுகாப்பு முறை உடன்படிக்கைகள் ஆகியவற்றின் மீதான பொருத்தனையின் கீழ் இலங்கை அரசாங்கம் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகியுள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

## பாகம் 1

### அத்தியாயம் 1

#### இலங்கை அணுசக்தி சபையைத் தாபித்தல்

இலங்கை அணுசக்தி சபையைத் தாபித்தல்.

**2.** (1) இலங்கை அணுசக்தி சபை என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 6 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்டிருத்தலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

**3.** சபையின் குறிக்கோள்களாவன - *சபையின் குறிக்கோள்கள்.*

(அ) அணு தொழினுட்பவியலின் பாதகமற்ற பிரயோகத்தை மேம்படுத்தலும் ஊக்குவித்தலும் அத்தகைய தொழினுட்பவியலைப் பயன்படுத்தி சேவைகளை வழங்குதலும்;

(ஆ) தேசிய குறிக்கோள்களை எய்தப்பெறும் நோக்கத்துக்காக அணு அறிவியலின் மீது, ஆராய்ச்சியை நடாத்துதல் மற்றும் அணு தொழினுட்பவியலின் பாதகமற்ற பிரயோகத்தை விருத்தி செய்தலும்;

(இ) அணு தொழினுட்பத்தின் பாதகமற்ற பயன்பாடுகளில் காத்தல் மற்றும் பாதுகாத்தல் முறைமைகளையும், தரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு புதிய கண்டுப்பிடிப்புக்களை மேம்படுத்தலும் ஆதரவளித்தலும்;

(ஈ) அணுவியல் பிரயோகங்களுடன் தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தற் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக கதிர்வீச்சுப் பாதுகாப்புச் சேவைகளை ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(உ) வர்த்தக அல்லது வேறு நோக்கங்களுக்காக அயனாக்கற் கதிர்வீச்சுடனும் அதனோடிணைந்த தொழிநுட்பங்களுடனும் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

**4.** சபையின் கடமைகள் மற்றும் பணிகளாவன - *சபையின் கடமைகளும் பணிகளும்.*

(அ) மருத்துவஞ்சார், சூழல்சார், விவசாயஞ்சார், கைத்தொழிற்துறைசார் மற்றும் வேறு பாதகமற்ற நோக்கங்களுக்காகவும் தேசிய அபிவிருத்திக்குத் தேவைப்படக்கூடியவாறான அறிவியல் மற்றும் தொழினுட்பவியல் முன்னேற்றத்துக்காகவும் கதிரியக்க பொருட்களையும் அயனாக்க கதிர்வீச்சையும் அவற்றோடு இணைந்த தொழினுட்பங்களுடன் அல்லது வேறுவகையிலோ பயன்படுத்துதல்;

(ஆ) அயனாக்கற் கதிர்வீச்சை அதனோடு இணைந்த தொழி னுட்பங்களுடனோ அல்லது வேறு வகையிலோ பிரயோகிப்பது தொடர்பில் ஆராய்ச்சியை நிறை வேற்றுதல்;

(இ) சபையின் பணியாட்டொகுதியினருக்கும் மற்றும் வேறு எவையேனும் இயைபான நிறுவனங்களின் அலுவலர் களுக்கும் தோதான பயிற்சிக்கு கிடைக்கப் பெறுவதற் கான போதிய வசதிகளையும், ஒழுங்கேற்பாடுகளும் செய்துகொடுப்பதை உறுதிப்படுத்துதல்;

(ஈ) அணு தொழினுட்பவியலை, அல்லது வேறு கதிரியக்கப் பொருட்களை பயன்படுத்துவது தொடர்பிலான தகவல் கிடைக்கத்தக்கதாகவிருப்பின், அத்தகவலை ஏதேனும் இயைபான அரசாங்க நிறுவனத்திற்கு அல்லது தேசிய அல்லது சர்வதேச ரீதியிலான ஏதேனும் அரச சார்பற்ற நிறுவனத்திற்கும் பொதுமக்களுக்கும் வேண்டுகோளின் பேரிலும் அல்லது தோதானதெனக் கருதப்படுமிடத்து வழங்குதல்;

(உ) அயனாக்கற் கதிர்வீச்சு, அதனோடு இணைந்த முறை களுடனோ அல்லது வேறுவகையிலோ பிரயோகிப் பதில் உதவுவதற்கும், எவையேனும் தொடர்புபட்ட சேவைகள் கிடைக்கத்தக்கதாக இருப்பின் அச்சேவைகள் வழங்குவதற்குமென உயர்தொழில்சார் ஒழுங்கமைப்புக் களும் சங்கங்களும் தாபிக்கப்படுவதை மேம்படுத்துதல்;

(ஊ) அணு தொழினுட்பவியலிலும், கதிர்த் தொழிற்பாட்டு பிரயோகங்களிலும் ஏனைய தொடர்புபட்ட விடயங் களிலும் ஆராய்ச்சி நிலையங்களையும், ஆய்வுகூடங் களையும், முன்னோடி பொறித் தொகுதிகளையும் நிர்மாணித்தலும் தொழிற்படுத்துதலும்;

(எ) கதிர் இசோறோப் உற்பத்திக்கும் பகிர்ந்தளிப்பதற்கும், கதிரியக்க கழிவுகளை முகாமை செய்வதற்கும் வெளியேற்றுவதற்குமான நிறுவுகைகளை அல்லது வசதிகளை நிர்மாணித்துத் தொழிற்படுத்துதல்;

(ஏ) அணு தொழினுட்பவியலின் பாதகமற்ற பிரயோகித்தலின் நிலைபெறுதகு விருத்தியில் உதவுதல்;

(ஐ) இலங்கையினுள் கதிரியக்க கனிப்பொருள் மூலவளங்களின் கிடைக்கப்பெறு தகைமையை வெளிக்கொணருதல்;

(ஒ) சபை அதன் குறிக்கோள்களை எய்தப் பெறுவதற்கு உகந்ததெனக் கருதுகின்றவாறான அத்தகைய உள்ளூர் அல்லது சர்வதேச நிறுவனங்களுடன் அல்லது ஒழுங்கமைப்புக்களுடன் அறிவியல் மற்றும் தொழினுட்ப ஒத்துழைப்பைத் தாபித்தலும், பேணுதலும் விருத்தி செய்தலும்;

(ஓ) அயனாக்கற் கதிர்வீச்சு அல்லது ஏனைய இணைந்த தொழினுட்பங்கள் சம்பந்தப்பட்ட வர்த்தக மற்றும் ஏனைய தொழில்முயற்சிகளில் ஈடுபடுதல்;

(ஔ) அதன் கடமைகளையும் பணிகளையும் புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பிலான தகவலை அமைச்சருக்குக் கொடுத்துதவுதல்; அத்துடன்

(க) சபையின் குறிக்கோள்களை எய்தப் பெறுவதற்கு அவசியமென சபை அபிப்பிராயப்படுகின்றவாறான அத்தகைய ஏனைய கடமைகளையும் பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும்.

*சபையின் தத்துவங்கள்.*

**5.** இச்சட்டத்தினால் சபைக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களுக்கு மேலதிகமாக, சபை அதன் பணிகளை பயனுறு வகையில் நிறைவேற்றுவதற்காக பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:–

(அ) அதன் பணிகளை பயனுறுவகையில் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறாக நுண்ணாய்வகங்களையும், நூலகங்களையும், வேலைக்களங்களையும், வேறு எவையேனும் கட்டிடங்களையும் நிறுவுதலும், உபகரணமயமாக்கலும், பேணுதலும்;

(ஆ) சபையின் பணிகளுடன் இயைபான அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட ஏதேனும் விடயப்பொருள் பற்றிய அறிக்கைகளையும், பருவகால சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும் சேகரித்தல், அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல்;

(இ) இலங்கையினுள் அல்லது வெளியிலோ பூரண அளவில் அல்லது பகுதியளவில் சபையின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்ட நிறுவனங்களுடன் ஒத்துழைப்பதற்காக அமைச்சரின் அங்கீகாரத்துடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல்;

(ஈ) ஏதேனும் பொருளில், பண்டத்தில் அல்லது சாமானில் உள்ள கதிரியக்க மாசடைதல் மற்றும் அயனாக்கற் கதிர்வீச்சு மட்டங்களை நிச்சயிப்பதற்கு சோதனைச் சேவைகளை ஏற்பாடு செய்தல்;

(உ) மதிப்பாய்வுச் சேவைகளையும் கதிர்வீச்சு அளவிடும் சாதனத்திற்கான சேவைகளையும் ஊட்டுஅளவீட்டுச் சேவைகளையும் ஏற்பாடுசெய்தல்;

(ஊ) சபையின் அபிப்பிராயப்படி, அயனாக்க கதிர்வீச்சு உற்பத்தி அல்லது பயன்பாடு அல்லது ஏதேனும் ஆராய்ச்சி தொடர்பில் தேவைப்படுகின்ற அல்லது தேவைப்படும் சாத்தியம் கொண்ட ஏதேனும் பொருளை உற்பத்தி செய்தல், கொள்வனவு செய்தல், இறக்குமதி செய்தல் அல்லது கொள்ளுதல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல், இடம்பெயர்த்தல் அல்லது ஏற்றுமதி செய்தல், அத்துடன் அத்தகைய ஏதேனும் பொருளை கையுதிர்த்தல்;

(எ) சபை தவிர்ந்த ஏதேனும் நிறுவனத்தினால் அல்லது எவரேனும் ஆளினால் நடாத்தப்படும் அல்லது கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் ஆராய்ச்சி அல்லது உற்பத்தி தொடர்பில் பயன்படுத்துவதற்கு சபைக்குச் சொந்தமான ஏதேனும் சாதனத்தை அல்லது எவையேனும் வசதிகளை, சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் கிடைக்கத்தக்கதாகச் செய்தல்;

(ஏ) இச்சட்டத்தின் கீழ் உரிமம் அளிக்கப்படாத அல்லது அவற்றின் சொந்தக்காரர் இல்லாத எவையேனும் கதிரியக்க மூலங்களின் அல்லது கதிரியக்க கழிவின் பாதுகாப்பையும் காப்பையும் உறுதிப்படுத்துவதற்கான போதிய வழிமுறைகளை, அவை சம்பந்தப்பட்ட தகவல் கிடைக்கப்பெற்றதன் மேல் எடுத்தல்;

(ஐ) அணு அறிவியல் மற்றும் தொழினுட்பவியல் கதிரியக்க பொருட்கள் தொடர்பான விடயங்களிலும் மற்றும் தொடர்புபட்ட விடயங்களிலும் தகவல் பரப்புதலும் மற்றும் ஆட்களுக்குப் பயிற்சியளித்தலும்;

(ஒ) அணு அறிவியல் மற்றும் தொழினுட்பவியல், அயனாக்கற் கதிர்வீச்சு அல்லது கதிரியக்கப் பொருள் மற்றும் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் தொடர்புபட்ட விடயங்களிலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் நடாத்தப்படுவதற்காக பல்கலைக்கழகங்கள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் இலங்கையினுள் அல்லது அதற்கு வெளியிலோ உள்ள வேறு எவையேனும் நிறுவனங்கள் அல்லது ஆட்களுடன் ஒழுங்கேற்பாடுகளைச் செய்துகொள்ளுதல்;

(ஓ) விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், தொழினுட்ப ஆளணியினர் மற்றும் சபையின் ஏனைய ஊழியர்களுக்கு செயற்றிறன் அடிப்படையிலான ஊக்குவிப்புக்களை, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வகுத்தமைக்கப்படும் அத்தகைய திட்டமுறைகளுக்கு இணங்க வழங்குதல்;

(ஔ) சபையின் கடமைகள் மற்றும் பணிகள் எவற்றையும் சபையின் தவிசாளருக்கு அல்லது எவரேனும் உறுப்பினருக்கு அல்லது சபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளித்தல்;

(க) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும், அவற்றை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல், ஈடுவைத்தல், பரிமாற்றம் செய்தல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல்;

(ங) வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், நடைமுறைப் படுத்தல் மற்றும் பேணிவருதல், சபையின் பணங்களை ஏதேனும் வங்கியில் வைப்பிலிடுதல், அத்துடன் சபையின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப் படுத்தப்படாதவாறான அதன் நிதியங்களை சபை தீர்மானிக்கப்படக்கூடியவற்றின் அத்தகைய பிணைப் பொறுப்புக்களில் முதலீடு செய்தல்;

(ச) அதன் தத்துவங்களை மற்றும் பணிகளை பிரயோகிக்கும் மற்றும் நிறைவேற்றும் நோக்கங்களுக்கு அவசியமாகின்றவாறான அத்தகைய பணத்தைக் கடன் எடுத்தல்;

(ஞ) அதன் தத்துவங்களை மற்றும் பணிகளை பயனுறு வகையில் பிரயோகிப்பதற்கும் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகின்றவாறான எவையேனும் ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளுதல்;

(ட) சபையினால் அளிக்கப்படும் எவையேனும் சேவைகளுக்காக கட்டணங்களை விதித்தலும், பெற்றுக்கொள்ளுதலும்;

(ண) சபையின் குறிக்கோள்களை எய்தப் பெறுவதற்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்; அத்துடன்

(த) இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியிலும் உள்ள மூலங்களில் இருந்து அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களை மானியக் கொடைகளாகவும் கொடை

களாகவும், இயைபான அரசாங்க நடவடிக்கை முறைகளுக்கு இணங்கியொழுகுவதில் ஏற்றுக்கொள்ளுதலும், பெற்றுக் கொள்ளுதலும் அவற்றை சபையின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கும், நிறைவேற்றும் நோக்கங்களுக்குப் பயன்படுத்துதலும்.

*சபையின் அமைப்பு.*

**6.** (1) சபையானது, அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்களுள் மூன்றுக்குக் குறையாதவர்கள், அணுசக்தி மற்றும் அதன் பயன்பாடுகள் நிதி, சட்டம், சுகாதாரம் கைத்தொழில் மற்றும் நிருவாகம் என்ற துறையில் அனுபவமும் எண்பிக்கப்பட்ட ஆற்றலும் கொண்டவர்களாக இருத்தலும் வேண்டும்; துறைகளிலிருந்தானவர்களாக இருத்தலும் வேண்டும்.

(2) அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரை சபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(3) சபையின் உறுப்பினர்கள் மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலேயொழிய மீள நியமிக்கப்படத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் சபையின் உறுப்பினர்களுக்கும் அதன் கூட்டங்கள் நடத்தப்படுவதற்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*குழுக்களையும் நிபுணர்களையும் நியமித்தல்.*

**7.** (1) சபையானது, அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் உதவுவதற்கு அவசியமென அல்லது உசிதமானதெனக் கருதுகின்ற அத்தகைய குழுக்களையும் நிபுணர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவொன்று, அதன் அலுவல்களையும் அவற்றின் கூட்டங்களையும் நடாத்துவதற்குமான நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஏதேனும் குழுவின் உறுப்பினர்களுக்கும் நிபுணரொருவருக்கும் சபை தீர்மானிக்கின்றவாறான அத்தகைய படி செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் குழுவிற்கு அல்லது நிபுணருக்கு குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பில் உறப்படும் செலவுகள் எவையும் மீளளிக்கப்படுதலும் வேண்டும்.

வழிகாட்டல்களையும், பணிப்புக்களையும் வழங்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

**8.** (அ) சபையின் பணிகளையும் தத்துவங்களையும் புரிவதிலும் பிரயோகிப்பதிலும் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைநெறி தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத அத்தகைய வழிகாட்டல்களையும், பணிப்புக்களையும் அமைச்சர் சபைக்கு வழங்கலாம்.

(ஆ)சபையானது அமைச்சரினால் வழங்கப்படும் எவையேனும் வழிகாட்டல்களுடன் அல்லது பணிப்புக்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

## **பாகம் II**

## அத்தியாயம் II

### **இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தற் பேரவையைத் தாபித்தல்**

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தற் பேரவையைத் தாபித்தல்.

**9.** (1) அயனாக்கற் கதிர்வீச்சுடன் சம்பந்தப்பட்ட செயல்முறைகளை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தற் பேரவை என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இச்சட்டத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

(2) பேரவையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தொதுக்கப்பட்ட பெயர் கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

**10.** பேரவையின் குறிக்கோள்களாவன - பேரவையின் குறிக்கோள்கள்.

(அ) அயனாக்க கதிர்வீச்சுக்கு வெளிக்காட்டப்படுவதுடன் சம்பந்தப்பட்ட இடராபத்துக்களுக்கு எதிராக ஆட்களையும் சூழலையும் பாதுகாப்பதற்கும், தோதானவாறு மூலங்களையும் வசதிகளையும் பாதுகாப்பதற்கும் காப்பதற்குமான தேவைப்பாடுகளைத் தாபித்தல்;

(ஆ) ஏதேனும் மூலம், அணுப்பொருள் மற்றும் ஏனைய கதிரியக்க பொருள் காரணமாக எழும் தீங்கான பாதிப்புக்களிலிருந்து ஆட்களையும் சூழலையும் பாதுகாப்பதையும், அத்தகைய பொருளினது பாதுகாப்பையும் வசதிகளையும் உறுதிப்படுத்துவதற்குத் தோதான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்; அத்துடன்

(இ) இலங்கையினால் இணங்கியொழுக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள அணுசக்தி என்னும் துறையில் சர்வதேச நியமங்களுடனும் கடப்பாடுகளுடனும் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துதல்.

**11.** பேரவையின் பணிகளாவன — பேரவையின் பணிகள்.

(அ) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிமங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், திரிபுபடுத்தல், இடைநிறுத்துதல் அல்லது அதனை ஒழித்தல்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடனும், இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் உரிமங்களில் குறித்துரைக்கப்படும் நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு சோதனையிடல் நிகழ்ச்சித்திட்டமொன்றை வகுத்தமைத்தல்;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் உரியமுறையில் இணங்கியொழுகுவதையும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அல்லது விதிகளை மற்றும் வழங்கப்பட்ட உரிமங்களில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளையும் உரியவாறு வலுவுக்கிடப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்கு தோதான வழிமுறைகளை மேற்கொள்ளுதல்;

(ஈ) இலங்கையினுள் கிடைக்கத்தக்க அனைத்து மூலங்களினதும் தகவல் அடங்கியுள்ள தேசிய இடாப்பொன்றைப் பேணுதல்;

(உ) பொதுமக்களுக்கும், ஊடகத்துக்கும் மற்றும் வேறு எவரேனும் இயைபான அக்கறைகொண்டோருக்கும் பேரவையின் ஒழுங்குபடுத்தற் செயற்பாடுகள் தொடர்பான தகவல் வழங்குதல்;

(ஊ) அயனாக்க கதிர்வீச்சுக்கு எதிரான பாதுகாப்பு, மூலங்களினதும் மற்றும் அணு மற்றும் கதிரியக்கப்பொருளின் பாதுகாப்பும், காப்பும், கதிரியக்க கழிவின் முகாமைத்துவம் என்பவற்றிற்கான தேசியக் கொள்கையும், செயல்நுணுக்கத்தின் வகுத்தமைப்பின் மீது அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தல்;

(எ) சர்வதேச அணுசக்தி முகவராண்மையினாலும் மற்றும் அதையொத்த வேறு எவையேனும் சர்வதேச ஒழுங்கமைப்புக்களினால் எடுத்துரைக்கப்பட்ட சிறப்பு செயல்முறைகளைப் பிரதிபலிக்கும் விதிகள், நெறிக்கோவைகள் மற்றும் கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் அயனாக்கற் கதிர்வீச்சின் பிரயோகம் தொடர்பிலான நியமங்களை வகுத்தமைத்தலும் மீளாய்வு செய்தலும்;

(ஏ) பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தின் மீதும் மற்றும் பேரவை ஆலோசனை அளிக்கத் தோதானதெனக் கருதும் விடயங்கள் மீதும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்; அத்துடன்

(ஐ) பேரவையின் அபிப்பிராயப்படி அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அத்தகைய வேறு கடமைகளையும் பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும்.

பேரவையின் தத்துவங்கள்.

**12**. இச்சட்டத்தினால் பேரவைக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களுக்கு மேலதிகமாக, பேரவையானது, அதன் பணிகளை பயனுறுவகையில் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமென பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கதிர்த் தொழிற்பாட்டு அவசரகால நிலைமைகளைத் தடுப்பதற்கான வழிறைகள் எடுத்தல்;

(ஆ) ஒழுங்குபடுத்தற் செய்முறை பற்றியனவும் ஒழுங்குபடுத்தற் செயல்முறைகள் பற்றிய பாதுகாப்பு, சுகாதாரம், சூழல் அம்சங்கள் பற்றியனவுமான நிகழ்வுகள், விபத்துக்கள், இயற்கைக்குமாறான நிகழ்வுகள் உள்ளடங்கியவற்றை பொதுமக்களுக்கும் ஏனைய அக்கறை கொண்டோருக்கும் அறிவிப்பதற்கும் அவர்களைக் கலந்தாலோசிப்பதற்கும் பொறிமுறைகளையும் நடவடிக்கைகளையும் தாபித்தல்;

(இ) அயனாக்க கதிர்வீச்சிலிருந்து எழும் ஊறுபாடு அல்லது சேத இடராபத்துக்கு எதிராக பாதுகாப்பையும் காப்பையும் மேம்படுத்துவதற்காக உள்ளூர் மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்புக்களுடன் ஒத்துழைத்தல்;

(ஈ) பேரவையின் குறிக்கோள்களை எய்தப்பெறும் நோக்கத்திற்காக பேரவையின் பணியாட்டொகுதியினருக்கும் வேறு எவரேனும் இயைபான ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கும் பயிற்சி அளித்தல்;

(உ) மூலங்களின் பாதுகாப்பும் காப்பும் தொடர்பில் இலங்கை திறத்தவராகவுள்ள சர்வதேச பொருத்தனைகள், சமவாயங்கள், இயைபான இணைவுகள் மற்றும் உடன்படிக்கைகள் என்பனவற்றின் கீழ் இலங்கையின் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்;

(ஊ) உயிர் வாழ்வு அல்லது சூழல் மீது தாக்கம் ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகளும் இயற்கைக்கு மாறான நிகழ்வுகளும், மூலங்களின் பயன்பாடும் தொடர்பிலான தகவல் கிடைக்கத்தக்கதாயின் அவற்றை பேரவை தீர்மானிக் கின்றவாறான தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான எவரேனும் ஆளுக்கும் பொதுமக்களுக்கும் கிடைக்கப் பெறச் செய்தல்;

(எ) கதிரியக்க கழிவுகள் உட்பட அணு மற்றும் கதிரி யக்கப் பொருட்களின் சுகாதாரம், பாதுகாப்பு, சூழற்பாது காப்பு, காப்பு, அவசர நிலைமைகள், இடம்பெயர்த்தல் அல்லது ஏற்றுமதி இறக்குமதி போன்ற அத்தகைய விடயங்களில் தகுதிபெற்ற அரச முகவராண்மைகளு டனும் அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்புக்களுடனும் அல்லது தனியாட்களுடனும் ஒருங்கிணைதல்;

(ஏ) இச்சட்டத்தினதும், அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினதும், அல்லது விதிகளினதும் ஏற்பாடுகள் மற்றும் எவையேனும் உரிமங்களின் நிபந் தனைகளுடன் இணங்கியொழுகப்படுவதை உறுதிப் படுத்தும் நோக்கத்துக்காக செயல்முறைகளையும் வசதி களையும் சோதனையிடல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்;

(ஐ) உரிமமளிக்கப்பட்ட செயல்முறையொன்று நடாத்தப் படும் ஏதேனும் அமைவிடத்தில் பாதுகாப்பற்ற அல்லது பாதுகாப்பற்ற சாத்தியமுள்ள நிலைமைகள் காணப்பட்டால் எடுக்கத் தேவைப்படுத்தப்பட்ட சீராக்கல் வழிமுறைகள் தொடர்பிலான பணிப்புக்களை வழங்குதல்;

(ஒ) அணுப் பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரச கணக்கீட்டு முறைமையொன்றைத் தாபித்துப் பேணுவது உள்ளிட்ட, பாதுகாப்பு உடன்படிக்கைகளின் கீழான கடப்பாடுகளைப் பயனுறுத்துவதற்கு அவசியமான வாறான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்;

(ஓ) அணு அல்லது கதிரியக்கப் பொருட்களினதும், தொடர்புபட்ட சாதனம் மற்றும் இணைந்த வசதி களினதும் பாதுகாப்புக்காக, அத்தகைய பொருட்கள், சாதனம் அல்லது வசதிகள் சம்பந்தப்பட்ட அதிகார மளிக்கப்படாத செயல்களைக் கண்டுபிடிப்பதற்கும், தடுப்பதற்கும் மற்றும் அவற்றிற்கு பதிலளிப்பாக பௌதீகப் பாதுகாப்புக்கான வழிமுறைகள் உள்ளிட்ட, ஒழுங்குபடுத்தற் வழிமுறைகளை அமுல்படுத்துதலும்;

(ஔ) கதிர்வீச்சின் அளவு மற்றும் கதிர்வீச்சின் அளவீட்டு சாதனத்தை மதிப்பாய்வு செய்தல் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டுள்ள நிறுவகங்களுக்கு அல்லது தனியாட்களுக்கு சான்றுப்படுத்துகையை வழங்குவதற்கு நடவடிக்கை முறைகளையும், பொறிமுறைகளையும் தாபித்தல்;

(க) அணு அறிவியல் மற்றும் தொழிநுட்பவியல் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும், கதிரியக்க அல்லது அணுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட ஏதேனும் விபத்து நிகழ்வதன் மீது எடுக்கத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் தற்காப்பு நடவடிக்கைகளை எடுத்தலும்;

(ங) இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டு, உள்ளூரில் கிடைக்கத்தக்க பொருட்களை அல்லது சரக்குகளை சோதனையிடுதலும் கதிரியக்க பரீட்சிப்பு நோக்கத்துக்காக மாதிரிகளை எடுத்தலும், பேரவை அவசியமானதும் தோதானதும் எனக் கருதுமிடத்து, அத்தகைய பரீட்சிப்பின் பெறுபேறுகளை பொதுமக்களினதும் இயைபான அனைத்து அதிகார சபைகளினதும் தகவலுக்காக வெளியிடுதலும்:

இப்பந்தியின் நோக்கத்துக்காகப் "பொருட்கள்" மற்றும் "சரக்குகள்" என்பவை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை அல்லது சரக்குகளையும், அத்தகைய கொள்கலன்களைக் கொண்டு செல்லும் எவையேனும் கலங்களை அல்லது வானூர்திகளையும் உள்ளடக்குகின்றது;

(ச) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல் மற்றும் வைத்திருத்தல் அத்துடன் அவற்றை விற்பனை செய்தல், குத்தகைக்குவிடுதல், ஈடுவைத்தல், பரிமாற்றம் செய்தல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல்;

(ஞ) பேரவையின் பணிகளுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயப்பொருளின் மீதான அறிக்கைகளையும் பத்திரிகைகளையும் சேகரித்தல் மற்றும் வெளியிடுதல்;

(ட) பேரவை அங்கீகரிக்கும் ஏதேனும் வங்கியில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு வங்கிக் கணக்குகளைத் திறத்தலும், பேணிவருதலும் ; அத்துடன்

(ண) அதன் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகின்ற வாறான ஆய்வுகூடங்கள், நூலகங்கள், வேலைக் களங்கள் மற்றும் அலுவலகங்கள் உள்ளடங்கலான கட்டிடங்களை கட்டியெழுப்புதலும், சாதனம் அளித் தலும் பேணுதலும்.

பேரவையினால் பின்பற்றி யொழுகப்பட வேண்டிய பொதுவான கோட்பாடுகள்.

**13**. பேரவை அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிர யோகிப்பதிலும் புரிவதிலும் பின்வரும் பொதுவான நெறிகளைப் பின்பற்றுதல் வேண்டும் :-

(அ) அயனாக்க கதிர்வீச்சின் ஆபத்தான பாதிப்புக்களி லிருந்து உயிர்வாழ்வையும், ஆதனத்தையும் மற்றும் சூழலையும் காத்தலும் பாதுகாத்தலும்;

(ஆ) உரிமத்திற்காக விண்ணப்பிக்கப்பட்ட செயல்முறையை நடாத்துவதை அனுமதிப்பதற்குப் போதிய நியாயப் படுத்தல் உள்ளமை;

(இ) பயனுறு ஊட்டம் அல்லது உரிமமளிக்கப்பட்ட செயல் முறையிலிருந்து வெளிக்காட்டல்களின் சேர்மானத்தின் மூலம் சாத்தியமான விளைவிக்கப்பட்ட பேரவை யினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஊட்ட வரையறை களை விஞ்சாத வகையில் தனியாட்களின் வழமையான வெளிக்காட்டலை மட்டுப்படுத்தப்படுதல்; அத்துடன்

(ஈ) தனிப்பட்ட ஊட்டல்களின் அளவும், தனிப்பட்ட வெளிக்காட்டலின் எண்ணிக்கையும் மற்றும் சாத்திய முள்ள உறப்பட்ட வெளிக்காட்டல்களும், பொருளாதார, சமூக காரணிகளைக் கவனத்திற் கொண்டு, நியாயமாக எய்தக்கூடியவகையில் குறைவாக வைத்திருக்கப்படும் வகையில் பாதுகாப்பை உச்சப்படுத்துதல்.

பேரவையின் அமைப்பு.

**14.** (1) பேரவையானது அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அணு அறிவியல், தொழிநுட்பத்துறையில் அல்லது கதிர்வீச்சுப் பாதுகாப்புத்துறையில் நிபுணத்துவம் பெற்ற மூன்று ஆட்கள்;

(ஆ) பேரவையின் குறிக்கோள்களுடன் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட சட்ட அம்சங்களில் அனுபவம் பெற்ற ஆள் ஒருவர்; அத்துடன்

(இ) சூழல் என்னும் விடயத்திற்கு குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச்சினது அத்தகைய அமைச்சர் பெயர் குறித்து நியமிக்கப்படும் மேலதிக செயலாளர் அல்லது பணிப்பாளரொருவர் என்னும் தரத்திற்குக் குறையாத சிரேட்ட அலுவலர் ஒருவர்.

(2) அமைச்சர், பேரவையின் தவிசாளராக அதன் உறுப் பினர்களுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) பேரவையின் தவிசாளரும், ஏனைய நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலே யொழிய மீளநியமிக்கப்படத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் பேரவை யின் உறுப்பினர்களுக்கும் அதன் கூட்டங்களை நடாத்துவதற்கும், அவை தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*பரிசோதனை யாளர்களை நியமித்தல்.*

**15.** பேரவையானது, இச்சட்டத்தின் கீழான அதன் பணிகளைப் புரிவதில் பேரவைக்கு உதவும் நோக்கங்களுக்காக அதன் அலுவலர்களிடையேயிருந்து அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களை பரிசோதனையாளர்களாக நியமித்தல் வேண்டும் என்பதுடன், தோதான அறிமுகச்சான்றுப் பத்திரம் அவர்களுக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும். (இதனகத்துப் பின்னர் "அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதனையாளர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்).

*அதிகாரமளிக் கப்பட்ட பரிசோதனை யாளர்களுக்கு உதவுவதற்கு பொலிசு அலுவலர்களை நியமித்தல்.*

**16.** (1) (அ) பேரவையானது, அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதனையாளர் தமது பணிகளைப் புரிவதில் உதவும் நோக்கத்துக்காக உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் தரத்திற்கு மேற்பட்ட தரத்திலுள்ள எவரேனும் பொலிசு அலுவலரின் சேவைகளை ஏற்பாடு செய்யுமாறு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

(ஆ) பேரவை வேண்டுகோள் விடுவிக்கும் போது அத்தகைய பொலிசு அலுவலரின் கிடைக்கத்தகு நன்மையை உறுதிப்படுத்துவதற்கு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அவரது சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டவாறான ஒரு பொலிசு அலுவலர் வேறு சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், ஏதேனும் பேரவையினால் ஆக்கப்பட்ட முறைப்பாட்டின் மீது இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சந்தேகிக்கப்படும் எவரேனும் ஆளை பிடியாணையின்றிக் கைது செய்தல் வேண்டும்.

(ஆ) பொலிசு அலுவலர் அத்தகைய ஆளை அத்தகைய தவறு எந்நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் புரியப்பட்டதாக சார்த்தப்படுகின்றதோ அந் நீதிவான் நீதிமன்றத்தின் முன் முன்னிலைப்படுத்தல் வேண்டும்.

மதியுரைக் குழுக்களின் நியமனம்.

**17.** (1) பேரவையானது இச்சட்டத்தின் கீழ் அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் உதவுவதற்கென -

(அ) அது அவசியமென அல்லது தோதானதெனக் கருதுகின்றவாறு அத்தகைய எண்ணிக்கையான மதியுரைக் குழுக்களை நியமிக்கலாம்; அத்துடன்

(ஆ) அதன் நிரந்தரப் பணியாட்டொகுதியினர் அல்லாத வெளி நிபுணர் எவரினதும் சேவைகளை மதியுரைநர்களாக அல்லது கலந்தாலோசகராகப் பெற்றுக்கொள்ளலாம்:

ஆயின் ஏதேனும் மதியுரைக் குழுக்களை நியமித்தலோ அல்லது நிரந்தரப் பணியாட்டொகுதி அல்லாத எவரேனும் நிபுணரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதலோ இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் கீழ் பேரவையின்மீது சுமத்தப்பட்ட பொறுப்புடைமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை பேரவை நிறைவேற்றுவதினின்றும் எவ்வகையிலும் விடுவிப்பதாக இருத்தல் ஆகாது.

(2) இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் கீழ் பேரவை ஏதேனும் முடிபை ஆக்குவதற்கு அழைக்கப்பட்டதன் மீது முரணான அக்கறை கொண்டுள்ளவரான முறையற்ற செல்வாக்குப் பிரயோகிக்கும் நிலையிலுள்ளவரான ஆள் எவரும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் மதியுரைக் குழுவின் உறுப்பினராகவோ, அல்லது நிபுணராகவோ நியமிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் பேரவையின் கடமையாதல் வேண்டும்.

## அத்தியாயம் III

### உரிமங்கள் வழங்குதல்

*செயல்முறையை நடாத்துவதற்கு உரிமம் பெறத் தேவைப்படுத்தல்.*

**18.** (1) சபை உள்ளிட்ட ஆள் எவரும் -

(அ) பேரவையினால் அந்நோக்கத்துக்கென வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அதிகாரத்தின் கீழன்றி ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் படி பேரவையின் ஒழுங்குபடுத்தற் கட்டுப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஒரு செயல்முறையாக இருந்தாலே யொழிய,

(இதனகத்துப் பின்னர் ''செயல்முறை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அயனாக்க கதிர்வீச்சை உட்படுத்தும் செயல் முறையை நடாத்துதல் ஆகாது.

(2) அந்நோக்கத்துக்கென உரிமமொன்றைப் பெற்றுக் கொள்ளாது ஒரு செயல்முறையை நடாத்துவதற்கு செயல்முறையை நடாத்தும் அல்லது ஏதேனும் மூலத்தைப் பயன்படுத்தும் ஆள் ஒருவர் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஏழாண்டுகளை விஞ்சாத ஒரு காலத்திற்கான மறியற்றண்டணைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*பேரவை குறித்தசில செயல்முறைகள் அல்லது செயல்முறைக் குள்ளான ஏதேனும் மூலம் உரிமம் பெறுவதி லிருந்து விலக்களித்தல்.*

**19.** (1) பேரவையானது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பின்வரும் காரணிகளைக் கருத்திற்கொண்டு ஏதேனும் செயல்முறையை அல்லது ஒழுங்குபடுத்தற் கட்டுப் பாட்டிலிருந்து ஒரு செயல்முறைக்குள்ளான ஏதேனும் மூலத்தை விலக்களிப்பதற்கு அதிகாரமுடையதாதல் வேண்டும்:-

(அ) செயல்முறையை அல்லது சம்பந்தப்பட்ட மூலத்தை நடாத்துவதின் மூலம் பொதுமக்களின் எவரேனும் உறுப்பினருக்கு ஏற்படக்கூடியவாறான கதிர்வீச்சு அபாயம் பேரவையின் உறுப்பினருக்கு ஒழுங்குபடுத்து வதற்கான அக்கறையைக் கொண்டிருக்கக்கூடியதாக விராத வகையில் போதியளவு குறைவாக உள்ளது,

(ஆ) செயல்முறையின் அல்லது சம்பந்தப்பட்ட செயல் முறைக்குள்ளான மூலத்தின் கூட்டுக் கதிர்த் தொழிற் பாட்டுத் தாக்கமானது, அப்போது நிலவும் சூழ்நிலை களின் கீழ், பேரவையின் ஒழுங்குபடுத்தற் கட்டுப் பாட்டைத் தேவைப்படுத்தாதவாறு போதியளவு குறைந்த மட்டத்திலேயே உள்ளது;

(இ) செயல்முறையும், செயல்முறைக்குள்ளான மூலமும் உள்ளார்ந்த பாதுகாப்பு உள்ளதாகவும் மேலேயுள்ள (அ) அல்லது (ஆ) பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட காரணிகைள பூர்த்தி செய்யத் தவறும் நிலைக்கு இட்டுச் செல்லும்சாத்தியம்இல்லாததாகவும்உள்ளது; அத்துடன்

(ஈ) செயல்முறையானது 22(1)(ஆ) என்னும் பிரிவில் தரப் பட்டுள்ள அடிப்படையில் நியாயப்படுத்தக் கூடியதாக வுள்ளது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று –

(அ) செயல்முறையை நடாத்துவதிலிருந்து ஓராண்டில் பொதுமக்களின் உறுப்பினரொருவரினால் உறப்படு வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பயனுறு ஊட்டின் மட்டத் தைக் குறித்துரைத்தல் வேண்டும்;

(ஆ) விலக்களிப்பானது ஒரு செயல்முறைக்குள்ளான மூல மொன்று தொடர்புபட்டதாக இருக்குமிடத்து, ஏதேனும் ஒரு நேரத்தில் வளவுகளின் மீது காணப்படும் தரப்பட்ட நியூக்கிளைட்டின் மொத்தச் செயற்பாட்டின் அல்லது செயல்முறையில் பயன்படுத்தப்படும் நியூக்கிளைட்டின் செயற்பாட்டுச் செறிவின் குறைந்த மட்டங்களைக் குறித்துரைத்தல் வேண்டும்; அல்லது

(இ) செயல்முறையில் பயன்படுத்தப்படும் ஒரு கருவி தொடர்புபட்டதாகவிருக்குமிடத்து, சுற்றுப்புற ஊட்டு சமவலு வீத மட்டங்களையும், வழமையாகத் தொழிற் படும் நிலைமைகளில் அத்தகைய கருவி ஏற்படுத்தும் நேரடியான ஊட்டச் சமவலு வீதத்தையும், அத்தகைய கருவி உற்பத்தி செய்யும் கதிர்வீச்சுச் சக்தி மட்டத்தையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்று அதே முறையில் காலத்துக்குக்காலம் திருத்தப்படலாம் என்பதுடன், (2)ஆம் உட்பிரிவில் கூறப்பட்டுள்ள கட்டளைக் கற்களை குறித்துரைத்தலும் வேண்டும்.

செயல்முறையொன்றை நடாத்துவதற்கான எண்ணமொன்றை முன் வைப்பதற்கான அறிவித்தல்.

**20.** (1) ஒரு செயல்முறையை நடாத்துவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர், பேரவையினால் அதற்கென ஆக்கப்படும் விதிகளின்மூலம் பேரவையினால் குறித்துரைக் கப்பட்டவாறான அத்தகைய படிவத்தில் அத்தகைய செயல் முறையை நடாத்துவதற்கு முன்னும் ஓர் அறிவிப்பை பேரவைக்கு முன்வைத்தல் வேண்டும் என்பதுடன், அறிவிப்புடன் சேர்த்து பின்வரும் தகவலைச் சமர்ப்பித்தலும் வேண்டும்:-

(அ) எந்நோக்கத்துக்காக செயல்முறை நடாத்த திட்டமிடப் படுகின்றதோ அந் நோக்கம்;

(ஆ) கதிரியக்க பொருள் சம்பந்தப்படுகின்றவிடத்து, எந்நோக்கத்துக்கு அத்தகைய பொருள் பாவிக்கப் படுமோ அந்நோக்கமும், அத்தகைய கதிரியக்கப் பொருளினால் பயன்படுத்தப்படக்கூடிய உச்ச கதிரியக்கத் தொழிற்பாடும்;

(இ) செயல்முறையை நடாத்துவதில் கதிர்ப்பிறக்கக் கருவி பயன்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய பிரயோகங் களின் மூலம் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் அயனாக்க கதிர்வீச்சின் உச்ச சக்தி; அத்துடன்

(ஈ) அணு அல்லது அணுப்பிணைப்பு பொருளின் விடயத்தில், கதிரியக்கத் தொழிற்பாட்டு மட்டமும் பொருளில் உள்ள ஆக்கக்கூறு ஒவ்வொன்றினதும் நூற்று வீதமும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பெறப்பட்ட அறிவிப்பில் அடங்கியுள்ள தகவலைச் சீர்தூக்கிப்பார்த்தல் மீது, பேரவை யானது பின்வருவனவற்றைத் தீர்மானித்தல் வேண்டும்:-

(அ) சம்பந்தப்பட்ட செயல்முறை 19 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின் மூலம் பேரவையினால் விலக்களிக்கப்பட்ட ஒரு செயல்முறையா என்பதை; அல்லது

(ஆ) செயல்முறை பேரவையினால் விலக்களிக்கப்பட்டதாக இல்லாதிருக்குமிடத்து செயல்முறையின் தன்மையைக் கவனத்திற் கொண்டு செயல்முறையை நடாத்துவதற்கான உரிமத்தை பெறுமுன்னர்:-

(i) கட்டிடத்தின் அல்லது நிர்மாணத்தின் வரைபடத்தில் போதிய கதிர்வீச்சுக் காப்பு வழிமுறைகள் உள்ளடக்கப்பட்டிருத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கென, செயல்முறை நடாத்தப்படவுள்ள அத்தகைய கட்டிட அல்லது நிருமாணத்தின் வரைபடத்துக்கு பேரவையின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதா என்பதை; அத்துடன்

(ii) ஏதேனும் கதிரியக்கப் பொருளின் கதிரியக்க மூலம் அடங்கியுள்ள கதிர்ப்பிறக்க உபகரணத்தின் அல்லது சாதனத்தின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி சம்பந்தப்படுமிடத்து, அத்தகைய இறக்குமதி அல்லது ஏற்றுமதிக்கு பேரவையின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதா என்பதை;

(3) (அ) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அதில் குறிப்பீடுசெய்யப்பட்ட அங்கீகாரம் பெறப்படுவதற்கான அவசியம் பற்றிய ஒரு தீர்மானம் செய்யப்பட்டதன்மேல், பேரவையானது அறிவிப்பை முன்வைத்த ஆளுக்கு அத்தகைய தீர்மானத்தை உடனடியாக அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் கீழ் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு அவசியம் எனத் தீர்மானிக்கப்படுமிடத்து, பேரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துக்காக தொடர்பாடலில் குறித்துரைக்கப்பட்டதான அங்கீகாரக் கட்டணத்துடன் சேர்த்து அத்தகைய தகவலை சேர்த்து முன்வைக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட ஆளை வேண்டிக்கொள்ளுதல் வேண்டும்.

உரிமத்திற்கான விண்ணப்பம்.

**21.** (1) பேரவையானது:-

(அ) எந்த முன்னப்பட்ட செயல்முறை தொடர்பில் அறிவிப்பு முன்வைக்கப்பட்டதோ அச் செயல்முறையை நடாத்த உரிமம் பெறு முன்னர் அங்கீகாரம் தேவைப்படாது என 20(2) ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்குமிடத்து; அல்லது

(ஆ) பிரிவு 20(3) இன் கீழ் பெறப்பட்ட தகவலை சீர்தூக்கிப் பார்த்த பின்னர் அங்கீகாரம் வழங்குமிடத்து

செயல்முறையைத் தொடங்குமுன்னர் தோதான உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம் ஒன்றைச் செய்யுமாறு சம்பந் தப்பட்ட ஆளுக்கு பேரவை அறிவித்தல் வேண்டும்.

(2) உரிமத்திற்கான விண்ணப்பமொன்று பேரவையினால் விண்ணப்பத்துடன் அதற்காக ஏற்பாடு செய்யப்படும் தோதான படிவத்தில் பேரவையினால் தீர்மானிக்கப்பட்டதான விண்ணப் பக்கையாளுகை கட்டணத்துடன் சேர்த்து செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்களைச் செய்முறைப் படுத்தலும், உரிமங்களை வழங்குதலும்.

**22.** (1) பேரவையானது, 21 (2)ஆம் பிரிவின் கீழ் எச் செயல் முறை தொடர்பில் விண்ணப்பம் செய்யப்பட்டதோ அச் செயல் முறையை நடாத்துவதற்கான உரிமத்தை அத்தகைய விண்ணப்ப காரர்:-

(அ) செயல்முறையானது பேரவையினால் அங்கீகரிக்கப் பட்ட எந்த கட்டிட வரைபடத்தில் நடாத்தப்படவுள்ளதோ அவை எவையேனுமிருப்பின் அந்த கட்டிட வரை படத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகியுள்ளாரென;

(ஆ) அத்தகைய செயல்முறை ஏற்படுத்தக்கூடிய கதிர்வீச்சுத் தீங்காபத்தை எதிரீடு செய்யும்வகையில் வெளிக் காட்டப்படும் தனியாட்களுக்கு அல்லது சமூகத்திற்கு போதிய நலன் விளைவிக்கும் என்னும் அடிப்படையில் சம்பந்தப்பட்ட செயல்முறை நடாத்தப்படுவதை நியாயப்படுத்துவதற்கான நிலையில் உள்ளாரென;

(இ) பாதுகாப்பையும் காப்பையும் உறுதிப்படுத்தும் முறையொன்றில் செயல்முறை நடாத்தப்படுவதை இயலச் செய்வதற்கு போதிய மூலவளங்களையும், போதிய எண்ணிக்கையிலான தொழினுட்பத் தகைமைபெற்ற பணியாட்டொகுதியினரையும் கொண்டுள்ளாரென;

(ஈ) இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்பட்ட ஊட்டு வரையறைகளின் கீழ் வெளிப்படுத்த இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு தோதான வழிமுறைகளை எடுத்துள்ளாரென;

(உ) நியாயமானளவு உயர் பாதுகாப்பு மட்டத்தை பெறச் செய்வதற்கு ஏற்பாடு செய்யும் வண்ணம் பாதுகாப்பு உச்சப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு போதிய நடபடிகள் எடுத்துள்ளாரென;

(ஊ) கதிர்வீச்சுப் பாதுகாப்பு தொடர்பிலான அடிப்படை நெறிகளை தெளிவாக விளங்கிக்கொண்டுள்ளாரென;

(எ) சம்பந்தப்பட்ட செயல்முறையின் தொழிற்பாட்டை நிறுத்தும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பொறுப்புடைமைகளை எதிர்நோக்குவதற்கு போதிய நிதி மூலவளங்களையும், தொழினுட்ப தகைமைபெற்ற பணியாட்டொகுதியினரையும் கொண்டுள்ளாரென;

(ஏ) செயல்முறையை நடாத்துவதன் காரணமாக ஏற்படக்கூடியவாறான இடராபத்தின் தன்மை, பரிமாணம் மற்றும் சாத்தியக்கூறு பற்றி மதிப்பீடு செய்துள்ளாரென;

(ஐ) வேலையாட்கள், பொதுமக்கள், சூழல் என்பவற்றின் பாதுகாப்பும், காப்பும் மற்றும் கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு என்பனவற்றிற்கு எடுக்கப்படுவதற்குத் தேவைப்பட்ட அனைத்து அவசிய நடவடிக்கைகளையும் எடுத்துள்ளாரென;

(ஔ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள் அல்லது விதிகளுடன் இணங்கியொழுகுவதனை இயலச் செய்யும் பொருட்டு தேவைப்படுத்தப்பட்டதான அதன் விநியோகத்தர்களிடமிருந்து அல்லது உற்பத்தியாளர் களிடமிருந்து இயைபான தொழினுட்பத் தகவல் உள்ளிட்ட அனைத்து தகவலையும் பேரவைக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்; அத்துடன்

(ஓ) அவசரகால நிலைமைகளுக்கு ஆயத்தஞ் செய்தலும், முகங்கொடுத்தலும் திட்டமொன்றைத் தயாரித்து கிடைக்கத்தக்கதாகச் செய்துள்ளாரென,

திருப்தியடைவதன் மேல் உரிமம் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள கட்டளைக்கற்களின் நியதிகளின்படி பேரவையானது :-

(அ) விண்ணப்பகாரர் செயல்முறையை நடாத்துவதற்கு உரிமம் வழங்கப்படுவதற்கு தகவுடையவர் எனத் திருப்தியடைந்தால் அந்நோக்கத்துக்கென விதித்துரைக் கப்பட்ட படிவத்தில் உரிமம் வழங்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) விண்ணப்பகாரர் உரிமம் வழங்கப்படுவதற்கு தகவுடை யவர் அல்ல எனக் கருதுமிடத்து, வேண்டப்பட்ட உரிமத்தை வழங்க மறுக்கலாம் என்பதுடன் அத்தகைய மறுப்பையும் அதற்கான காரணங்களையும் விண்ணப்ப காரருக்கு அறிவித்தலும் வேண்டும்.

உரிமத்தின் நிபந்தனைகள்.

**23.** (1) 22ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று:-

(அ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டதான அத்தகைய நிபந்தனைகளுக்கும், தேவைப்பாடுகளுக்கும் அமை வானதாதல் வேண்டும்;

(ஆ) பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறான உரிமக் கட்டணமொன்றின் கொடுப்பனவுக்கு அமைவான தாதல் வேண்டும்;

(இ) அதற்கென ஆக்கப்பட்ட அத்தகைய விதிகளுக்கு இணங்க பேரவையினால் தீமானிக்கப்பட்டதான உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்கு வலுவுடையதாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) கைமாற்றத்தகாததாக இருத்தல் வேண்டும்.

(2) பேரவையானது வழங்கப்பட்ட உரிமங்கள், அத்தகைய உரிமங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டனவோ அந்த அடிப்படையில், ஒவ்வோர் உரிமத்தின் மீதும் விதிக்கப்படும் நிபந்தனைகளும் தேவைப்பாடுகளும் பற்றிய விபரங்கள் மற்றும் உரிமம் வழங்க மறுக்கப்படுமிடத்து அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் அடங்கிய இடாப்பொன்றைப் பேணிவருதல் வேண்டும்.

*உரிமம் பெற்றவரின் முதனிலையான கடமை.*

**24.** அயனாக்கற் கதிர்வீச்சின் தீங்கான பாதிப்புக்களுக்கு எதிராக உயிர்வாழ்வும், சூழலும் பாதுகாக்கப்படுவதற்கும் உரிமத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பையும் காப்பையும் உறுதிப்படுத்துவதற்கும் தேவையான தொழினுட்பம் மற்றும் ஒழுங்கமைப்புசார் வழிமுறைகளைத் தாபிப்பதும் நடைமுறைப்படுத்தும் உரிமம்பெற்றவரின் முதனிலையான கடமையாதல் வேண்டும்.

*மிகை வெளிக்காட்டல், மற்றும் திருட்டு முதலியன பற்றி அறிக்கையிடுதல்.*

**25.** ஒவ்வோர் உரிமம் பெற்றவரும், பின்வருவன பற்றி பேரவைக்கு :-

(அ) கதிர்வீச்சுக்கான மிகை வெளிப்படுத்தல் பற்றிய ஏதேனும் விடயத்தை, அத்தகைய வெளிப்படுத்தல் இடம்பெற்ற பின்னர் இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குக் குறையாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் அறிக்கையிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) எவையேனும் மூலங்களின் அல்லது பொருட்களின் ஏதேனும் காணாமற்போனமையை, திருட்டை, கதிரியக்கத் தொழிற்பாட்டு அவசரகால நிலைமையை அல்லது அதிகாரமளிக்கப்படாத நோக்கங்களுக்கான திசை திருப்புதலை, அத்தகைய நிகழ்வுபற்றி அறிந்த பின்னர் இருபத்திநான்கு மணித்தியாலங்களுள் அறிக்கை யிடுதல் வேண்டும்,

அத்துடன் அதன்பின்னர் அது தொடர்பில் பேரவையினால் வழங்கப்படக்கூடிய அவசரகால வழிமுறைகள் தொடர்பான எவையேனும் பணிப்புகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

கதிரியக்கப் பொருளை இடம்பெயர்ப் பதற்காக நாட்டப்பட்ட தேவைப் பாடுகளுடன் இணங்கி யொழுகுதல்.

**26.** கதிரியக்கப் பொருளை இடம்பெயர்த்தலை உட்படுத்திய செயல்முறையை நடாத்துவதற்காக உரிமம் வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமம் பெற்றவரும், பேரவையினால் அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கதிரியக்கப் பொருளையும் கதிரியக்க மூலங்களையும் இடம்பெயர்க்கும் நோக்கத்துக்காக பயன்படுத்தப்பட்ட கொள் கலன்களுக்கு அல்லது பொதிகளுக்கான அளவுக்குறிப்பீடுகள் தொடர்பிலான தேவைப்பாடுகள் உள்ளிட்டனவுமான அத்தகைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

உரிமத்தை திரிபுபடுத்தல்.

**27.** (1) உரிமம் பெற்றவர், பின்வரும் ஏதேனுமொன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிலைமைகள் ஏற்படுமிடத்து, அவரது உரிமம் எச்செயல்முறையை நடாத்துவதற்கு வழங்கப்பட்டதோ அச்செயல்முறையை, அத்தகைய உரிமத்தை திரிபுபடுத்துவதற்கு பேரவைக்கு எழுத்தில் விண்ணப்பிக்காது, தொடர்ந்து நடாத்தத் தடைசெய்யப்படுவார்:-

(அ) அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் மூலத்தினின்றும் வேறுபட்டதான ஏதேனும் மூலம் உரிமம் பெற்றவரி னால் பயன்படுத்தப்படவுள்ளவிடத்து;

(ஆ) உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதான கதிரியக்கப் பொருள் செயற்பாட்டை விஞ்சுகின்ற செயற்பாட்டை பயன்படுத்தவுள்ளவிடத்து;

(இ) சம்பந்தப்பட்ட செயல்முறையை நடாத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பௌதீக உட்கட்டமைப்பில் திரிபு மேற்கொள்ளப்படவுள்ளவிடத்து ; அல்லது

(ஈ) உரிமம் வழங்கப்பட்ட செயல்முறையை நடாத்துவதில் புதிய ஊழியர்களை வேலைக்கமர்த்தவுள்ளவிடத்து.

(2) பேரவையானது, உரிமத்தை திரிபுபடுத்த விண்ணப்பிக்கும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, அனுமதிக்கப்படக்கூடிய திரிபுபடுத்தல்கள் பற்றி தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், வழங்கப்பட்ட உரிமத்தை அதற்கிணங்க திரிபுபடுத்துதலும் வேண்டும்.

உரிமத்தை புதுப்பித்தல்.

**28.** (1) தமது உரிமத்தைப் புதுப்பிக்க விரும்பும் உரிமம் பெற்றவரொருவர், வழங்கப்பட்ட உரிமம் காலாவதியாகும் தேதிக்கு முன்னர் மூன்று மாதங்களுக்குக் குறையாமல் அதற்காக விண்ணப்பத்தைச் செய்யத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) உரிமம்பெற்றவர் ஒருவர், (1)ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் விண்ணப்பமொன்றைச் செய்யத் தவறுமிடத்து, பேரவையானது, அத்தகைய உரிமம் பெற்றவர் அதன் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு உட்கருதாதவராக இருந்தாலொழிய, உடனடியாக விண்ணப்பமொன்றைச் செய்யும்படி அத்தகைய உரிமம்பெற்றவரைப் பணித்தல் வேண்டுமென்பதுடன், உரிமத்தின் புதுப்பித்தல் முடிவுறும்வரை இடைக்கால உரிமமொன்றையும் வழங்கலாம்.

(3) உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று பேரவையினால் அதற்கென ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய படிவத்தில் புதுப்பித்தல் கட்டணத்துடன் சேர்த்து செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய விண்ணப்பத்தை படிமுறைப் படுத்துவதற்கும், அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) உரிமம் புதுப்பிக்கப்படுமிடத்து, பேரவை தோதானதெனக் கருதுமிடத்து, அவ் உரிமம் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட போது அமைவாக இருந்த நிபந்தனைகளுடனும், தேவைப்பாடுகளுடனும் சேர்த்து மேலதிகமாக மேலும் நிபந்தனைகளையும் தேவைப்பாடு களையும் விதிக்கலாம்.

உரிமம் ஒன்று புதுப்பிக்கப் படாதிருக்கு மிடத்து பேரவைக்கு அறிவிக்கப் படுதல் வேண்டும்.

**29.** (1) உரிமம் பெற்றவர் தமது உரிமத்தை புதுப்பிக்க முன்னாதவிடத்து அத்தகைய நிகழ்வை உரிமம் காலாவதியாகும் தேதிக்கு முன்னர் மூன்று மாதங்களுக்கு குறையாது, பேரவைக்கு அறிவிப்பதற்கு அத்தகைய உரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு அறிவிக்கத் தவறுதல் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றாதல் வேண்டுமென்பதுடன் அவ்வாள் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு ஆளாகுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (3) ஆம், (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், (1) ஆம் உட்பிரிவின் கீழ் புதுப்பிக்கப்படாத உரிமம் எச் செயல்முறை தொடர்பிலானதோ அச் செயல்முறைக்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

உரிமமொன்றை புதுப்பிக்கத் தவறுகை யொன்றின் விளைவு.

**30.** (1) உரிமம் பெற்றவர் ஒருவர் தமது உரிமம் முடிவுறும் தேதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னராக அதனைப் புதுப்பிக்க விண்ணப்பிக்கத் தவறுமிடத்து உரிமம்பெற்றவர் ஒருவர் பேரவை யினால் அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் தீர்மானிக்கப் பட்டவாறான அத்தகைய வீதத்தில் ஒவ்வொரு நாளுக்குமான மிகைக் கட்டணக் கொடுப்பனவுக்கு உரிமம் முடிவுறும் தேதிவரை யில் செலுத்த ஆளாகுதல் வேண்டும், அத்துடன் உரிமம் புதுப்பிக் கும் போது செலுத்தத் தேவைப்படும் புதுப்பித்தல் கட்டணத்தையும் செலுத்தவேண்டும்.

(2) உரிமம் பெற்றவர் அதன் முடிவுறும் தேதிக்கு முன்னராக உரிமத்தைப் புதுப்பிக்க விண்ணப்பிக்கத்தவறுமிடத்து, பேரவை யானது அத்தயை உரிமம் முடிவுறுவதன் மீது உடனடியாக பின்வரும் தத்துவத்தை உடையதாதல் வேண்டும்:-

(அ) செயல்முறை நடாத்தப்படும் வளவுகள் மூடியடைக் கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மூடியடைத்து ஏழு நாட்களினுள் வளவினை மூடியடைத் ததை உறுதிப்படுத்தும் கட்டளையொன்றைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்ப மொன்றைச் செய்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) கதிரியக்க மூலத்தின் காப்பையும் பாதுகாப்பையும், மனித வாழ்வு மற்றும் சூழல் பாதுகாப்புக்காகவும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அம்முறை சம்பந்தமாக தோதாதெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்குதல் வேண்டு மென்பதுடன் இவற்றை உரிமம் பெற்றவர் கண்டிப்பாக கடைப்பிடித்தொழுகுவதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான பணிப்புக்கள் வழங்கப்பட்டவரான உரிமம் பெற்றவர் ஒருவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடை யனவாதல் வேண்டும்.

உரிமமொன்றை இரத்துச் செய்வதற்கான ஏதுக்கள்.

**31.** பேரவையினால் வழங்கப்பட்ட உரிமமொன்று:-

(அ) உரிமம் பெற்றவர் பொதுமக்களின் உடல் நலத்திற்கு ஏற்கத்தகாத அச்சுறுத்தலை அல்லது இடராபத்தை அல்லது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் உரிமத்தின் நிபந்தனையை மீறி அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்கு விதியின் அல்லது விதியின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுமிடத்து;

(ஆ) உரிமம் பெற்றவர் 39 ஆம் பிரிவின் கீழ் பேரவையினால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுமிடத்து;

(இ) உரிமம் பெற்றவர் உரிமம் வழங்கப்பட்ட செயல் முறையை நடாத்தாது அல்லது தொழிற்படுத்தாது ஒழிந்துள்ளவிடத்து;

(ஈ) அப்போதைக்கு நிலவும் சூழ்நிலைகளின் காரணமாக உரிமம் வழங்கப்பட்ட செயல்முறையை தொடர்ந்து நடாத்துவது பொதுமக்கள் உடனலத்திற்கு ஏற்கத்தகாத அச்சுறுத்தலை அல்லது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என பேரவை தீர்மானிக்குமிடத்து; அல்லது

(உ) செயல்முறையைத் தொடர்ந்து நடாத்துவது பொது மக்கள் உடல் நலத்திற்கு அல்லது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தச் செய்யும் குறித்த சில இயற்கை அல்லது வேறு காரணங்களினால் உள்வாங்கல் சூழல் மாறியுள்ளவிடத்து அல்லது மாற்றப்பட்டுள்ளவிடத்து, அதற்கென உரிமம் பெற்றவருக்கு அனுப்பிவைக்கப்படும் ஓர் அறிவிப்பின் மூலம் எந்நேரத்திலும் இல்லாதொழிக்கப்படலாம்.

*உரிமத்தை இல்லாதாக்கிய பின்னர் செயல்முறையொன்றை நடாத்துவது தவறொன்றாதல்.*

**32.** 31 ஆம் பிரிவின் கீழ் உரிமம் இல்லாதாக்கப்பட்ட பின்னர் செயல்முறையொன்றை தொடர்ந்து நடாத்தும் எவரேனுமாள், தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஏழாண்டு காலத்தை விஞ்சாத காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகுதலும் வேண்டும்.

*இல்லாதாக்கப்படும் பட்சத்தில் ஏதேனும் மூலத்திற்கு மூடி முத்திரை பொறிக்கப்படுதல்.*

**33.** (1) உரிமமொன்று பேரவையினால் இல்லாதாக்கப்படுமிடத்து, செயல்முறை தொடர்ந்து நடாத்தப்படுவதை தடுப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய இடங்களை அல்லது ஏதேனும் மூலத்தை பேரவை மூடி முத்திரையிடச் செய்விக்கலாம்.

*(2)* பேரவையானது *(1)* ஆம் உட்பிரிவின் கீழ் மூடி முத்திரையிடல் மேற்கொள்ளப்பட்டு ஏழு நாட்களினுள் நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்து, மேற்கொள்ளப்பட்ட மூடி முத்திரையிடலை உறுதிப்படுத்துவதற்கான கட்டளையைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

*(3)* பேரவையானது, உரிமமொன்று இல்லாதாக்கப்பட்ட நேரத்தில் அல்லது அதன்பின்னர் எந்நேரத்திலும், கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பும் காப்பும் மற்றும் மனித வாழ்வினதும் சூழலினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதற்கான முறைகள் பற்றிய அத்தகைய பணிப்புக்களை உரிமம் பெற்றவருக்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன், உரிமம் பெற்றவரும் அவ்வாறு வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

*(4) (3)* ஆம் உட்பிரிவின்கீழ் எவையேனும் பணிப்புக்கள் வழங்கப்பட்டவரான உரிமம் பெற்றவர் ஒருவர், வழங்கப்பட்ட பணிப்புக்களுக்கு திருப்திகரமான முறையில் இணங்கியொழுகப்பட்டுள்ளதும் சம்பந்தப்பட்ட செயல்முறையை நடாத்துவதில் பயன்படுத்தப்பட்ட கதிரியக்கப்பொருள் அல்லது மூலங்கள் மனித வாழ்வுக்கும் சூழலுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தாதொழிந்துள்ளது எனவும் திருப்தியடையும் போது பேரவையானது, இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தற் கடப்பாடுகளிலிருந்து விடுவித்தல் வேண்டும்;

(5) மூன்றாம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது மூன்றாண்டு காலத்தை விஞ்சாத மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற் தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*உரிமத்தை இடைநிறுத்தி வைத்தல்.*

**34.** (1) உரிமமொன்று பின்வருமாறு இடைநிறுத்தப்படலாம்:-

(அ) உரிமம் பெற்றவர் உரிமத்தின் ஏதேனும் நிபந்தனையை மீறி அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது விதியின் ஏதேனும் ஏற்பாட்டிற்கு முரணாகச் செயற்பட்டுள்ளதுடன், அத்தகைய மீறுகை அல்லது முரணான செயல் எவ்வகையிலும் பொதுமக்கள் உடல்நலத்திற்கு இடராபத்தை அல்லது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தாது இருக்குமிடத்து;

(ஆ) பொதுமக்கள் உடல் நலத்திற்கு அல்லது சூழலுக்கு ஏற்படும் அல்லது ஏற்படும் சாத்தியம் உள்ள ஏதேனும் ஆபத்தை அல்லது இடராபத்தை சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் தவிர்க்க அல்லது பரிகரிக்க கூடியதாகவிருக்குமிடத்து; அல்லது

(இ) உரிமம்பெற்றவர், 39ஆம் பிரிவின் கீழ் பேரவையினால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புரைகளுக்குக் காரணமின்றி இணங்கியொழுகத் தவறியிருக்குமிடத்து.

(2) உரிமத்தை இடைநிறுத்த முடிபு எடுக்கப்படுமிடத்து, பேரவையானது உரிமம் பெற்றவருக்கு அனுப்பப்படும் ஓர் அறிவிப்பில் உரிமம் இடைநிறுத்திவைக்கப்படும் காலப்பகுதியையும், இடைநிறுத்தல் அகற்றப்படுவதற்கு எடுக்கப்பட வேண்டிய தேவைப்பட்ட சீராக்கல் வழிமுறைகளையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) (அ) உரிமம் பெற்றவர் இடைநிறுத்தல் காலப்பகுதி முடிவதற்கும் முன்னரான அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட சீராக்கல் வழிமுறைகளை அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) இடைநிறுத்தல் காலப்பகுதி முடிவடையும் முன்னர் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளை அல்லது நடவடிக்கைகளை

உரிமம் பெற்றவர் பூர்த்திசெய்ய இயலாதவராகவிருக்குமிடத்து, அவற்றை மேற்கொள்ள மேலும் கால அவகாசம் கோரி எழுத்தில் வேண்டுகோள் செய்யலாம் என்பதுடன், பேரவையானது அச் சூழ்நிலைகளில் தோதானதெனக் கருதுமிடத்து மேலும் கால அவகாசத்தை வழங்கலாம்.

(4) பேரவையானது தேவையான வழிமுறைகள் அல்லது நடபடிகள் உரிமம் பெற்றவரினால் திருப்திகரமாக நிறைவேற்றப் பட்டுள்ளதென திருப்தியடைந்தால், பேரவை விதிக்கப்பட்ட இடைநிறுத்துதலை அகற்றுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழ் பேரவையினால் வழங்கப்பட்ட அறிவிப்பொன்று கிடைக்கப்பெற்ற பின்னரும், (4) ஆம் உட்பிரிவின் கீழ் இடைநிறுத்தல் அகற்றப்படுவதற்கு முன்னரும் ஒரு செயல்முறையை தொடர்ந்து நடாத்துகின்ற ஆள் ஒருவர், தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையின் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஏழாண்டுகளை விஞ்சாததொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**35.** (1) உரிமத்தை வழங்க மறுத்தல் அல்லது வழங்கப்பட்ட உரிமத்தை இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதல், அல்லது உரிமத்தைப் புதுப்பிக்க மறுத்தல் ஆகியன காரணமாக இன்னலுற்ற ஆள் ஒருவர், பேரவையின் முடிபுக்கு எதிராக அத்தகைய ஆளுக்கு அம்முடிவு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதகாலத்திற்குள், (இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரின் அமைச்சுச் செய லாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

உரிமத்தை இடைநிறுத்து வதற்கு அல்லது இல்லாதாக்கு தலுக்கு எதிராக மேன்முறையீடு.

(2) உரிமத்தின் இடைநிறுத்தலுக்கு அல்லது இல்லாதாக்கலுக்கு எதிராகச் செய்யப்படும் மேன்முறையீடு எவ்வகையிலும், அத்தகைய இடைநிறுத்தலை அல்லது இல்லாதாக்கலை ஒதுக்கிவைக்கும் பயனுடையதாக இருத்தல் ஆகாது. அத்துடன் சம்பந்தப்பட்ட ஆள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்ற அல்லது இல்லாதாக்கப்பட்டிருக்கின்ற செயல்முறையை 37 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய மேன்முறையீட்டின் மீது தீர்மானமொன்று மட்டும் செயலாளரினால் ஆக்கப்பட்ட தீர்மானம் எடுக்கும் வரையில் நடாத்துதல் ஆகாது.

மேன்முறை யீட்டைக் கேட்பதற்கு மேன்முறை யீடுகள் குழுவொன்றை நியமித்தல்.

**36.** (1) செயலாளர் ஏதேனும் மேன்முறையீடு கிடைக்கப்பெற்று ஒரு மாதத்தினுள், அத்தகைய மேன்முறையீட்டைக் கேட்டு, விசாரிப்பதற்கென, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட மேன்முறையீட்டுக்குழுவொன்றை நியமித்தல் வேண்டும்:-

(அ) அணுத் தொழினுட்பவியலில் பட்டப்பின் படிப்புத் தகைமை உடைய ஆள் ஒருவர், மேன்முறையீட்டுக் குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டும்;

(ஆ) கதிர்வீச்சுப் பாதுகாப்புத் துறையில் அனுபவம் வாய்ந்த ஆள் ஒருவர்; அத்துடன்

(இ) சட்டத் தகைமைகளையுடைய ஆள் ஒருவர்.

(2) ஆள் ஒருவர் -

(அ) பேரவையினால் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தை வைத் திருப்பவராக இருப்பின்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக் குழுவினால் விசாரிக்கப்படவுள்ள மேன்முறையீட்டு விடயப் பொருளில் நேரடியாகவோ நேரடியாகவல்லாதோ நிதிசார் அல்லது வேறு அக்கறையை உள்ளவராக இருப்பின்,

அத்தகைய ஆள் மேன்முறையீட்டுக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படத் தகைமையுடையவராதல் ஆகாது.

(3) மேன்முறையீட்டுக் குழுவின் உறுப்பினராக நியமிக் கப்பட்டதன் பின்னர் உறுப்பினர் ஒருவர் மேன்முறையீட்டு விடயப் பொருளில் தமக்கு நேரடியாகவோ அல்லது நேரடியாகவல் லாதோ அக்கறை கொண்டவராகக் காணப்படும்பட்சத்தில், அத்தகைய உறுப்பினர் அத்தகைய நிகழ்வு பற்றி செயலாளருக்கு உடனடியாக அறிவிப்பது அவ்வுறுப்பினரின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், செயலாளர் உடனடியாக, சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு மாற்றீடாக வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(4) (அ) மேன்முறையீட்டுக் குழுவானது மேன்முறையீட்டுக்கான திறத்தவர்களுக்கு விசாரிக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் வேண்டும், என்பதுடன் மேன்முறையீட்டுக் கேட்பு தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அதன் கேட்பை முடிவுறுத்தி, மேன்முறையீடு மீதான அதன் முடிவெடுப்புக்களும், விதப்புரைகளும் அடங்கிய அறிக்கையொன்றை செயலாளருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்;

(ஆ) குழுவானது குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அதன் கேட்பை முடிவுறுத்தல் இயலாதிருக்கும் பட்சத்தில், கால அவகாச நீடிப்பு கோரி செயலாளருக்கு எழுதிய வேண்டுகோள் விடுக்கலாம் என்பதுடன், செயலாளர் ஒரு மாதத்தை விஞ்சாத கால நீடிப்பொன்றை வழங்கவும் செய்யலாம்.

(5) மேன்முறையீட்டுக் குழுவின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்கும் பொறுப்பான அமைச்சரினால் தீர்மானிக்கப்படடவாறான அத்தகைய படி செலுத்தப்படுதல் வேண்டும்.

மேன்முறையீட்டின் மீது செயலாளரின் தீர்மானம்.

**37.** (1) செயலாளர் மேன்முறையீட்டுக் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்று இரண்டு கிழமைகளினுள், அறிக்கையில் செய்யப்பட்ட விதப்புரைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர் சம்பந்தப்பட்ட மேன்முறையீட்டை அனுமதிக்கும் அல்லது நிராகரிக்கும் தீர்மானம் ஒன்றைச் செய்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு எடுக்கப்பட்ட முடிபை பயனுறுத்துமாறு பேரவையைப் பணித்தலும் வேண்டும்.

(2) செயலாளர் மேன்முறையீட்டின் மீது செய்யப்பட்ட தீர்மானத்தை மேன்முறையீட்டுக்கான அனைத்து திறத்தவர்களுக்கும், உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

உரிமத்தை முடிவுறுத்தல்.

**38.** (1) இவ்வத்தியாயத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட ஆளொருவர் -

(அ) மரணிக்குமிடத்து அல்லது சம்பந்தப்பட்ட ஆள் கம்பெனியாகவோ அல்லது பங்காண்மையாகவோ இருந்து

அக்கம்பெனி அல்லது பங்காண்மை வங்குறோத்தாகு மிடத்து;

(ஆ) கடனிறுக்க வகையற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டால்; அல்லது

(இ) உரிமம் எச்செயல்முறை தொடர்பில் வழங்கப்பட்டதோ அச்செயல்முறையை அவ்வுரிமம் காலாவதியாவதற்கு முன்னர் தொடர்ந்து நடாத்தாதிருக்க விரும்புமிடத்து,

வழங்கப்பட்ட உரிமம் முடிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிகழ்வு இடம்பெற்றதன் மீது உரிமம் முடிவுறுத்தப்பட்டதாகக் கருதப்படுமிடத்து, உரிமம் பெற்றவர் அல்லது இறக்கின்ற உரிமம் பெற்றவரின் அடுத்துள்ள கிட்டிய உறவினர் அல்லது பங்காண்மையில் அல்லது கம்பெனியின் பங்காண்மையாளர்கள் அல்லது பணிப்பாளர்கள் அத்தகைய நிகழ்வு பற்றி உடனடியாக பேரவைக்கு அறிவித்தல் என்பதுடன், அதன் பின்னர் உரிமத்தின் கீழ் நடாத்தப்பட்ட செயல்முறை தொடர்பிலான கதிரியக்கப் பொருளின் அல்லது மூலங்களின் முகாமை தொடர்பாக, பேரவை வழங்கும் எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகு வதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தலும் அவரது கடமையாதல் வேண்டும்.

(3) சம்பந்தப்பட்ட செயல்முறையை நடாத்துவதில் பயன் படுத்தப்படும் கதிரியக்கப் பொருள் அல்லது மூலங்கள் மனித வாழ்வுக்கு அல்லது சூழலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாது ஒழிந்துள்ளது என பேரவை திருப்தியடையும்போது, இச்சட்டத் தின் கீழ் விதிக்கப்படும் அனைத்து ஒழுங்குபடுத்தற் கடப்பாடு களானவை, இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வரை பேரவை விடுவித்தல் வேண்டும்.

பேரவை பணிப்புரைகளை வழங்குதல்.

**39.** மனித வாழ்வுக்கும் சூழலுக்கும் ஏற்படும் ஏதேனும் சேதத்தை அல்லது பாதிப்பைத் தடுப்பதற்கு அல்லது தணிப்பதற்கு அல்லது மூலங்களின் காப்பும் பாதுகாப்பும் பற்றிய கட்டுப்பாட்டு இழப்பைத் தடுப்பதற்கு எடுக்கப்படவேண்டிய வழிமுறைகள்

தொடர்பில் எவரேனும் உரிமம் பெற்றவருக்கு பேரவை பணிப்புரைகளை வழங்கலாம். உரிமம் பெற்றவர் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

*அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகர்களின் தத்துவங்களும் கடமைகளும்.*

**40.** (1) அதற்கென பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்டவரான அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவர் உரிமம் பெற்றவரை அல்லது உரிமம் பெற்றவரின் எவரேனும் ஊழியரை பின்வருமாறு தேவைப்படுத்தலாம்:-

(அ) செயல்முறையை நடாத்துவதில் பயன்படுத்தப்படும் மூலங்களின் அல்லது கதிரியக்கப் பொருட்களின் வகைகளும் அளவுகளும் பற்றிய தகவலை அல்லது எவையேனும் பதிவேடுகளை கிடைக்கத்தக்கதாகச் செய்தல்;

(ஆ) கதிரியக்க அல்லது அணுப் பொருட்கள் களஞ்சியப் படுத்தப்படும் முறைகளையும், அமைவிடங்களையும் பற்றிய விபரங்களைக் கொடுத்தல்; அல்லது

(இ) இச்சட்டத்தின் கீழ் அவரது அல்லது அவளது கடமைகளை உரியவாறு புரிவதற்கு அவசியமென அவர் அல்லது அவள் கருதும் வேறு ஏதேனும் தகவலை வழங்குதல்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகர் எவரும் -

(அ) இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறான உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளாது செயல்முறையொன்று நடாத்தப்படுகின்றதென அல்லது எவையேனும் கதிரியக்க அல்லது அணுப்பொருள் களஞ்சியப் படுத்தப்படுகின்றதென அல்லது இடம் பெயர்க்கப்படுகின்றதென அல்லது காவிச் செல்லப்படுகின்றதென அல்லது நம்புவதற்கு அவருக்கு அல்லது அவளுக்கு நியாயமான காரணங்கள் உள்ளவிடத்து; அல்லது

(ஆ) சோதனையிடுதல், புலனாய்வு அல்லது பரிசோதனை மேற்கொள்ளும் நோக்கத்துக்காக அல்லது எவையேனும் மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக,

எவையேனும் வளவுகள், கட்டிடம், கலம், வாகனம் அல்லது வானூர்தி என்பவற்றின் மீது பகலில் ஏதேனும் நியாயமான எந்நேரத்திலும், அறிவித்தலுடன் அல்லது அறிவித்தலின்றி நுழையலாம் என்பதுடன், அத்தகைய வளவு, கட்டிடம், கலம், வாகனம் அல்லது வானூர்தி என்பனவற்றில் உள்ள ஆட்கள் அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகருக்கு அவரது கடமைகளைப் புரிவதில் அவசியமான அனைத்து உதவிகளையும் வழங்குதலும் வேண்டும்.

(3) உரிமம்பெற்றவர் ஒருவரும் அத்தகைய உரிமம்பெற்றவரின் ஒவ்வோர் ஊழியரும் அல்லது முகவரும், அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகரொருவர் இச்சட்டத்தின் கீழ் அவரது பணிகளைப் புரியும்போது உட்பிரவேசித்து சோதனையிடுவதற்கும், பரிசோதனை செய்து மாதிரிகளை எடுப்பதற்கும் அல்லது ஏதேனும் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கும் அவரினால் கோரப்படக்கூடிய எல்லா உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.

(4) அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவருக்கு வேண்டுமென்று முட்டுக்கட்டையிடும் அல்லது அத்தகைய பரிசோதகர் அவருக்கு சட்டமுறையாகப் பொறுப்பிக்கப்பட்ட கடமையை புரிவதில் செய்யப்பட்ட ஏதேனும் வேண்டுகோளுக்கு இணங்கியொழுக மறுக்கும் ஆள் எவரும், தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற் தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) பேரவையானது, இப்பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகரால் நிறைவேற்றப்படும் அனைத்துப் பார்வையிடல்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

*மூலங்களை அகற்றுமாறு பணிப்பதற்கான தத்துவம்.*

**41.** (1) உரிமமளிக்கப்பட்ட செயல்முறையொன்று ஆட்களுக்கு ஊறுவிளைவிக்கும் உடனடியான இடராபத்தை அல்லது ஆதனத்துக்கு அல்லது சூழலுக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்தும் முறையில் நடாத்தப்படுகின்றதென நம்புவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகருக்கு நியாயமான காரணங்கள் உள்ளவிடத்து அத்தகைய பரிசோதகர் அத்தகைய செயல்முறையை நடாத்தப்படும் வளவினை மூடி முத்திரையிடச் செய்விக்கலாம்.

(2) இப்பிரிவின் கீழ் எவையேனும் வளவுகளை மூடி முத்திரை யிடப்படும் பட்சத்தில், அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகர் அத்தகைய நிகழ்வு பற்றி உடனடியாக பேரவைக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) பேரவையானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் மூடிமுத்திரை யிடல் நிறைவேற்றப்பட்ட ஏழு நாட்களினுள் நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்து, நிறைவேற்றப் பட்ட மூடிமுத்திரையிடலை உறுதிப்படுத்துவதற்கான கட்டளை யொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(4) ஏதேனும் மூலம் பாதுகாப்பற்றதெனவும், அத்தகைய மூலத்தின் பாதுகாப்பு வெளிப்புற தாக்கத்தினால் பாதிக்கப் படக்கூடுமென நம்புவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பரிசோத கருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அவர், பேரவை யினால் முன்மொழியப்பட வேண்டியவாறு அத்தகைய மூலங் களை கூடுதலான பாதுகாப்பு அமைவிடத்துக்கு அகற்றுமாறு உரிமம்பெற்றவரைப் பணிக்கலாம்.

## அத்தியாயம் IV

### மூலங்களின் காப்பும், பாதுகாப்பும்

*கதிரியக்க மூலங்களை வகுதிப்படுத்தல்.*

**42.** (1) பேரவையானது, சர்வதேச ரீதியாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு கதிரியக்க மூலங்களை வகுதிப்படுத்தும் முறைமையொன்றை, அத்தகைய மூலங்கள் பாதுகாப்பாக முகாமை செய்யப்படாவிடில் அல்லது பத்திரமாகப் பாதுகாக்கப்படாவிடில் மக்களுக்கும், சூழலுக்கும் ஏற்படும் சாத்தியமுள்ள ஊறைப் பொறுத்து, அங்கீகரித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட எவையேனும் வகுதிப்படுத்தல்கள் பற்றிய அறிவிப்பொன்று வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*மூலங்கள் பற்றிய தேசிய இடாப்பில் அடங்கியுள்ள தகவலைப் பாதுகாத்தல்.*

**43.** பேரவையானது 11(ஈ) என்னும் பிரிவின் கீழ் பேணப்படும் மூலங்கள் மீதான தேசிய இடாப்பில் அடங்கியுள்ள தகவலை, பாதுகாப்பதற்கு அத்தகைய மூலங்களின் காப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும்பொருட்டு பாதுகாப்பதற்கு அவசியமான அனைத்து வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும்.

*கதிரியக்க மூலங்களின் வகுதிகளின் பௌதீகப் பாதுகாப்பு.*

**44.** கதிரியக்க மூலங்களின் வெவ்வேறு வகுதியினவான பௌதீக பாதுகாப்புக்கு உரிமம்பெற்றவர்களுடன் இணங்கியொழுகப்படுவதற்கான தேவைப்பாடுகளையும் கதிரியக்க மூலங்களின் அத்தகைய வகுதியினவான காப்புக்கும் பாதுகாப்புக்கும் அவசியமான வழிமுறைகளையும் பேரவை விதித்துரைத்தல் வேண்டும்.

*கதிர்வீச்சு மூலத்தின் ஏதேனும் இழப்பு பற்றி பேரவைக்கு அறிவிப்பது உரிமம் பெற்றவரின் கடமை.*

**45.** (1) ஆட்களுக்குக் குறிப்பிடத்தக்க ஊறின் இடராபத்தை அல்லது ஆதனத்திற்கு அல்லது சூழலுக்கும் கணிசமானளவு சேதத்தை ஏற்படுத்தும் வகையில் கதிரியக்க மூலத்தின் மீதான கட்டுப்பாட்டின் இழப்பு பற்றி அல்லது அதன் கதிரியக்க மூலம் தொடர்பில் இடம்பெற்ற வேறு ஏதேனும் சம்பவத்தின் நிகழ்வு பற்றி உரிமம் பெற்றவர் ஒவ்வொருவரும் உடனடியாக பேரவைக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் விதிக்கப்பட்ட கடமையுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்ற உரிமம் பெற்றவர் ஒருவர் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகுதலும் வேண்டும்.

*அநாதரவான மூலங்கள் மீதான தேசிய செயல் நுணுக்கம்.*

**46.** பேரவையானது, அநாதரவான கதிரியக்க மூலங்களின் மீது கட்டுப்பாட்டை உடனடியாக ஏற்பதற்கு அல்லது மீளவேற்பதற்கு ஒரு தேசிய செயல்நுணுக்க முறையை தேசிய பாதுகாப்பு அதிகார சபைகளுடனும், வேறு எவையேனும் இயைபான ஒழுங்கமைப்பு களுடனும் ஒருங்கிணைந்து விருத்தி செய்தல் வேண்டும்.

*கதிர்ப்பிறக்க உபகரணத்தின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி.*

**47.** (1) கதிர்ப்பிறக்க உபகரணமானது பேரவையின் எழுத்தி லான அங்கீகாரம் தவிர்ந்த எவரேனும் ஆளினால் இலங்கைக் குள் இறக்குமதி செய்யப்படுதலோ அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுதலோ ஆகாது.

(2) ஏதேனும்கதிர்ப்பிறக்க உபகரணத்தை ஏற்றுமதி செய்வதற்காக அல்லது இறக்குமதி செய்வதற்காக (1) ஆம் உட்பிரிவின் கீழான அங்கீகாரமொன்றின் வழங்குகையானது அத்தகைய கதிர்ப்பிறக்க உபகரணம் ஒரு செயல்முறையை நடாத்தும் நோக்கத்துக்குப் பயன் படுத்தப்பட, விநியோகிக்கப்பட அல்லது விற்பனை செய்யப்பட உள்ளதாகவிருந்து அச் செயல்முறையை நடாத்த இச்சட்டத்தின் கீழ் உரிமம்பெறத் தேவையாகவிருந்தால், அத்தகைய தோதான உரிமத்தை சம்பந்தப்பட்ட ஆள் பெறுவதினின்றும் விலக்களிப் பதாகக் கருதப்படுதல் ஆகாது.

*கதிரியக்க மூலங்களின் ஏற்றுமதி அல்லது இறக்குமதி.*

**48.** (1) வேறு ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் கதிரியக்க மூலத்தினை அல்லது அத்தகைய ஏதேனும் மூலத்தைக் கொண்டுள்ள எவையேனும் உபகரணங்களை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு அல்லது இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு அல்லது அத்த கைய மூலத்தை இலங்கைக்கு ஊடாக இடம்பெயர்ப்பதற்கு உரிமம் வழங்க அல்லது வேறு ஏதேனும் படிவத்திலான அங்கீகாரம் வழங்க தத்துவம் உரித்தாக்கப்படும் ஆள் அல்லது அதிகாரசபை எதுவும், அதற்காக அத்தகைய உரிமத்தை அல்லது அங்கீ காரத்தை, பேரவையின் எழுத்திலான முன்னங்கீகாரத்தை பெறா மல் வழங்குதல் ஆகாது.

(2) (அ) பேரவையானது சர்வதேச ரீதியாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்களின் மீதான அடிப்படையில் அதற்கென ஆக்கப் படும் விதிகள் மூலம், (1) ஆம் உட்பிரிவின் கீழ் அங்கீகாரம் வழங்கப்படுவதற்காக பேரவை பின்பற்ற வேண்டிய தேவைப்பாடு களையும் நடவடிக்கைமுறைகளையும் குறித்துரைத்தல் வேண்டும்;

(ஆ) விதிகளானவை கதிரியக்க மூலத்தின் அல்லது சம்பந் தப்பட்ட மூலம் அடங்கிய வேறு உபகரணத்தின் பாதுகாப்பையும் காப்பையும் உறுதிப்படுத்துவதற்கு அங்கீகாரம் கோரும் ஆளுக்கு உள்ள தகைமையையும் ஆற்றலையும் மதிப்பீடு செய்யும் பொருட்டு தகவல் மதிப்பீட்டுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(3) பிரிவு 42(1) இன் நியதிகளின்படி வகுதிப்படுத்தப்பட்ட கதிரியக்க மூலங்களின் ஏற்றுமதிக்கு உரிமம் வழங்குவதற்கான அங்கீகாரம் அல்லது வேறு ஏதேனும் படிவத்திலான அங்கீகாரம் வழங்கப்படு முன்னர், சம்பந்தப்பட்ட மூலத்தின் காப்பு மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு தோதான தொழில்நுட்ப மற்றும் நிருவாக தகைமையையும், மூலங்களையும் ஒழுங்குபடுத்தற் கட்டமைப்பையும் இறக்குமதி செய்யும் நாடு கொண்டுள்ளதென, செயல்முறைக்குகந்தளவு பேரவை தன்னைத் திருப்திசெய்து கொள்ளுதல் வேண்டும்.

## அத்தியாயம் V

### அணு மற்றும் ஏனைய கதிரியக்க பொருளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடு

கட்டுப்படுத்தப் பட்ட இனங்கள்.

**49.** (1) பேரவையானது, பாதுகாப்பு உடன்படிக்கையின் கீழ் அடங்கியன உள்ளிட்ட சர்வதேச கடப்பாடுகளுக்கும் பொறுப்பு டைமைகளுக்கும் இணங்கியொழுகி, இச்சட்டத்தின் கீழான கட்டுப்பாட்டுக்கு அமைவாக இலங்கைக்குள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் அணுபொருள், சாதனங்கள் மற்றும் தொழினுட்பவியல் அடங்கிய நிரலொன்றைத் தயாரித்தல் வேண்டும், (இது, இதனகத்துப்பின்னர் "கட்டுப்படுத்தப்பட்ட இனங்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்.)

(2) பேரவையானது, அதனால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய முறையில் அவ்வாறு தயாரிக்கப்பட்ட நிரலுக்கு போதியளவு வெளியிடுதல் வேண்டும்.

(3) நிரல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*பேரவையின் அங்கீகாரம் இன்றி கட்டுப் படுத்தப்பட்ட விடயங்களின் ஏற்றுமதி அல்லது இறக்குமதி மீதான தடை.*

**50.** (1) வேறு சட்டத்தில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப் பினும், பேரவையின் எழுத்திலான முன்னங்கீகாரம் இன்றி, ஏதேனும் கட்டுப்படுத்தப்பட்ட இனத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கான அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரம், அதிகாரம் அல்லது அனுமதி எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்கான அங்கீகார மொன்று, பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்த கைய படிவத்திலும் அத்தகைய கட்டணக் கொடுப்பனவின் மீதும் பேரவைக்குச் செய்யப்படும் விண்ணபத்தின் மீது பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) வழங்கப்பட்ட அங்கீகாரமொன்று குறித்துரைக்கப் பட்டவாறான பாதுகாப்பு உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் தேவைப்பாடுகள் மற்றும் கடப்பாடுகளின் மீதான அடிப் படையில் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

(3) எவையேனும் கட்டுப்படுத்தப்பட்ட இனங்களின் ஏற்று மதிக்கு அல்லது இறக்குமதிக்கு (1) ஆம் உட்பிரிவின் கீழான அங்கீ காரமொன்றின் வழங்குகையானது அத்தகைய கட்டுப்படுத் தப்பட்ட இனம் இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றுக் கொள்ளப் படுத்தப்பட்டதற்கான ஒரு செயல்முறையை நடாத்தும் நோக் கத்துக்காக பயன்படுத்தப்பட, படிமுறைப்படுத்தப்பட, இடம் பெயர்க்கப்பட, விநியோகிக்கப்பட அல்லது விற்பனை செய்யப்பட உள்ளதானவிடத்து, அத்தோதான உரிமத்தைப் பெறுவதினின்றும் சம்பந்தப்பட்ட ஆளுக்கு விலக்களிப்பதாகக் கருதப்படுதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் கட்டுப்பட்டுத்தப்பட்ட இனம் இலங்கைக்குள் இறக்குமதி செய்யும் அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யும் எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், வேறு ஏதேனும்

சட்டத்தின் கீழ் எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிந்தமைக்காக விதிக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் தண்டப்பணத்துக்கு மேலதிகமாக, ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகுதலும் வேண்டும்.

(5) கட்டுப்படுத்தப்பட்ட இனம் எதுவும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் சுங்க அலுவலரால் கைப்பற்றப்படுமிடத்து, அக்கட்டளைச்சட்டத்தில் உள்ளடங்கிய வற்றுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய சுங்க அலுவலர் உடனடியாக அத்தகைய நிகழ்வுகள் பற்றி பேரவைக்கு அறிவிக்க தேவைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், பேரவையானது அவ்வாறு கைப்பற்றப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட இனத்தை கட்டுப்பாட்டில் எடுத்து, காப்பையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கென, பேரவையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள எவையேனும் வளவுகளில் வைத்திருக்கத் தத்துவம் கொண்டதாதலும் வேண்டும்.

பேரவையானது கட்டுப்படுத்தப்பட்ட இனங்களின் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் அங்கீகாரம் வழங்கும் விதிகளை ஆக்குதல்.

**51.** பேரவையானது தோதானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விதிகளை ஆக்கலாம் என்பதுடன் அவை ஏதேனும் கட்டுப்படுத்தப்பட்ட இனத்தின் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமான அங்கீகாரம் வழங்குவதில் பேரவைக்கு வழிகாட்டுதல் வேண்டும்.

அணுப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பில் பேரவையின் கடமை.

**52.** (1) பாதுகாப்பு உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள அணு எரிபொருள் சுழற்சி சக்கரத்தின் மட்டத்தை எய்தாத யுரேனியம் அல்லது தோரியம் அடங்கிய ஏதேனும் பொருள், இலங்கையிலிருந்து அணுசாரா ஆயுத நாடு ஒன்றுக்கு நேரடியாகவோ நேரடியாகவல்லாதோ ஏற்றுமதி செய்யப்படுமிடத்து, பேரவையானது அத்தகைய கதிரியக்கப் பொருள் அணுசாரா நோக்கத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டாலேயொழிய, அதன் அளவு, அமைப்பு மற்றும் சென்றடையும் இடம் பற்றி சர்வதேச அணு சக்தி முகவராண்மைக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) பாதுகாப்பு உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள அணு எரிபொருள் சுழற்சிச் சக்கரத்தின் மட்டத்தை எய்தாத யூரேனியம் அல்லது தோரியம் அடங்கியுள்ள ஏதேனும் பொருள், இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுமிடத்து, பேரவையானது அணுசாரா நோக்கங்களுக்காக அத்தகைய பொருள் இறக்குமதி செய்தாலன்றி அதன் அளவும் மற்றும் அமைப்பு பற்றி சர்வதேச அணு சக்தி முகவராண்மைக்கு அறிவித்தல் வேண்டும்.

*பாதுகாப்பு உடன் படிக்கையின் கீழ் அணுப் பொருள் சர்வதேச ரீதியாக கைமாற்றப் படும் போது பொறுப்பு டைமைகளின் கைமாற்றுதல்.*

**53.** (1) பாதுகாப்பு உடன்படிக்கை ஏற்புடையதாகும் அணு பொருள் எதுவும், சர்வதேச ரீதியாக கைமாற்றப்படுமிடத்து, அத்தகைய பொருளுக்கான பொறுப்புடைமை பேரவையின் பொறுப்புடைமையாக பின்வருமாறு கருதப்படுதல் வேண்டும்:-

(அ) ஏதேனும் இறக்குமதி விடயத்தில், அத்தகைய பொறுப்புடைமை ஏற்றுமதி செய்த அரசுடன் நாட்டினதாகவில்லாதொழியும் நேரத்திலிருந்து அணுப்பொருள் இலங்கையை வந்தடையும் நேரத்திற்கு பிந்தாதவாறு; அத்துடன்

(ஆ) ஏதேனும் ஏற்றுமதி விடயத்தில் ஏற்கும் அரசு அத்தகைய பொறுப்புடைமையை ஏற்கும் வரையிலும் அணு பொருள் சென்றடையும் இடத்தை சென்றடையும் நேரத்திற்கு பிந்தாதவாறு.

(2) பேரவையானது அதன் புலத்தின் மீது அல்லது அதன் மேலாக அல்லது அதன் ஆள்புல நீர்பரப்பில் இடப்பெயர் விலுள்ளது அல்லது அத்தகைய பொருள் இலங்கைக் கொடியின் கீழ் அல்லது அதன் வானூர்தியில் இடமாற்றப்படுகின்றது என்ற வெறுமனே காரணத்திற்கு மட்டும் அணுப் பொருளுக்களான ஏதேனும் பொறுப்புடையதெனக் கருதப்படுதல் ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக இலங்கைக்குள் இறக்குமதி அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி தொடர்பில் பேரவையின் பொறுப்புடைமையானது எந்நேரத்தில் இல்லாதொழியும் என்பது பேரவையினால் பாதுகாப்பு உடன்படிக் கைக்கு இணங்கியொழுகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VI

### கதிரியக்க கழிவு

தேசிய கொள்கையும் செயல் நுணுக்கமும்.

**54**. அமைச்சர் சர்வதேச நியமங்களின் மீதான அடிப்படையிலான கதிரியக்க கழிவு முகாமை பற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல் வேண்டும்.

கதிரியக்க கழிவின் காப்பும் பாதுகாப்பும்.

**55**. அதன் வாழ்நாள் முழுவதுமான கதிரியக்க கழிவின் பாதுகாப்பையும் காப்பையும் உறுதிப்படுத்துவதற்கான பிரதான பொறுப்பு டைமையானது இயைபான உரிமம் வைத்திருப்பவரின் மீதாகுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் விதிக்கப்பட்ட பொறுப்புடைமையை பூர்த்திசெய்யத் தவறும் உரிமம் பெற்றவர் ஒருவர், தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது மூன்றாண்டு களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

கதிரியக்க கழிவின் இறக்குமதி.

**56**. (1) இலங்கைக் குடியரசுக்கு வெளியே பிறப்பிக்கப்படும் கதிரியக்ககழிவு கழிவானது, அதனை இறக்குமதி செய்வது தேசிய அக்கறை கருதியது எனவும் பேரவையின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானித்தலேயன்றி பேரவையினால் எழுத்திலான முன் அங்கீகாரம் வழங்கப்பட்டாலேயொழியவும் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படும் ஆள் எவரும், தவறொன்றைப் புரிந்தவராகுதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகுதலும் வேண்டும்.

**57.** (1) ஆள் எவரும், இலங்கை குடியரசினுள் பிறப்பிக்கப்படும் கதிரியக்க கழிவை, பேரவையின் எழுத்திலான முன்னங்கீகாரமும் இறக்குமதி செய்யும் நாட்டின் சம்மதமும் இன்றி, ஏற்றுமதி செய்தல் ஆகாது.

*கதிரியக்க கழிவின் ஏற்றுமதி.*

(2) பேரவையானது கஞ்சியப்படுத்துவதற்கு அல்லது கையுதிர்க்கும் நோக்கங்களுக்காக 60 பாகை வீச்செல்லை தெற்கே உள்ள இடத்திற்கு கதிரியக்க கழிவை ஏற்றுமதி செய்ய அங்கீகாரம் வழங்குதல் ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படும் ஆள் எவரும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிந்தவராகுதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகுதலும் வேண்டும்.

## அத்தியாயம் VII

### தேசிய அணுசக்தி அவசரகால நிலைமைத் திட்டம்

**58.** (1) பேரவையானது 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை பேரழிவுச் செயலாட்சி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, தேசிய மட்டத்தில் சாத்தியமான அணுக் கரு அல்லது கதிர்தொழற்பாட்டு அவசரகால நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கென, (இதனகத்துப் பின்னர் "அவசரகால நிலைமை முகாமைத்துவத் திட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய அணுவியல், கதிர்ப்பியல் அவசரநிலைமை முகாமைத்துவத் திட்டமொன்றை விருத்தி செய்தல் வேண்டும்.

*அணு அல்லது கதிர்த் தொழிற்பாட்டு அவசரகால நிலைமைகளுக்கான தேசியத் திட்டம்.*

(2) 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை பேரழிவு செயலாட்சிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அவசரகால நிலைமை முகாமைத்திட்டத்தின் ஏற்பு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பேரவையானது, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை பேரழிவு செயலாட்சிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பேரழிவுச் செயலாட்சி நிலையமானது ஏதேனும் அணுக்கரு அல்லது கதிர்த் தொழிற்பாட்டு அவசரகால நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில் அத்தகைய நிலையத்தினால் நிறைவேற்றப்படும் ஏதேனும் தலையீட்டின்போது உதவிசெய்தலும் மதியுரையளித்தலும் வேண்டும்.

*எல்லைகளுக்கப் பாலான அவசரகால நிலைமைகள்.*

**59.** (1) அணுக்கரு அல்லது கதிர்த் தொழிற்பாட்டு அவசரகால நிலைமை இலங்கைக்குள் ஏற்பட்டு அக்கதிரியக்க மாசுறல் இலங்கையின் எல்லைகளுக்கப்பால் பரவும் அபாயம் ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில், பேரவையானது உடனடியாக அத்தகைய அவசர கால நிலைமை பற்றி சர்வதேச அணுசக்தி முகவராண்மைக்கும் அத்தகைய மாசுறுதலால் பௌதிக ரீதியில் பாதிக்கப்படக்கூடிய ஏதேனும் அரசின் எவையேனும் இயைபான அதிகார சபைக்கும் அறிவித்தல் வேண்டும்.

(2) அணுக்கரு விபத்துப் பற்றிய நேரகால அறிவிப்பு பற்றிய சமவாயம் மற்றும் அணுக்கரு விபத்து அல்லது கதிர்த் தொழிற்பாட்டு அவசரகால நிலைமையின் விடயத்தில் உதவி வழங்குதல் பற்றிய சமவாயம் உள்ளிட்ட எவையேனும் இயைபான சர்வதேச சாசனங்களின் நியதிகளின்படி அணு அல்லது கதிர்த் தொழிற்பாட்டு அவசரகால நிலைமைகள் சம்பந்தமான ஏதேனும் தகவலை அல்லது உதவியை வழங்குவதற்கான தொடர்புமையமாக பேரவை செயலாற்றுதல் வேண்டும்.

## அத்தியாயம் VIII

### பாதுகாப்புக்கள்

*பாதுகாப்பு உடன் படிக்கையுடன் இணங்கி யொழுகுவதை பேரவை உறுதிப்படுத்துதல்.*

**60.** பேரவையானது, பாதுகாப்பு உடன்படிக்கையின் கீழ் ஏற்கப்பட்ட இலங்கையின் கடப்பாடுகள் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்தி அத்தகைய உடன்படிக்கையுடன் உரியமுறையில் இணங்கியொழுகுவதற்கு அவசியமான அனைத்து உதவியையும் ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

**61.** இலங்கையில் அனைத்து அணுக்கரு செயற்பாடுகளும் அவை தொடர்பிலான இலங்கையின் இயைபான சர்வதேச கடப்பாடுகளுடன் இணங்கியொழுகி, பாதகமற்ற நோக்கங்களுக்கு மட்டுமே நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

அணுச் செயற்பாடுகள் புறநீங்கலான பாதகமற்ற நோக்கங்களுக்கு இருத்தல் வேண்டும்.

**62.** (1) அணுவாயுதங்கள் மற்றும் ஏனைய அணுசார் வெடிபொருள் கருவிகள், அத்தகைய ஆயுதங்கள் அல்லது வெடிப்பொருள் மீதான நேரடியான அல்லது நேரடியல்லாத கட்டுப்பாடு, அத்தகைய ஆயுதங்களை அல்லது கருவிகளை உற்பத்தி செய்தல் அல்லது கொள்ளுதல் அவற்றின் தயாரிப்பில் பங்கெடுத்தல், ஏதேனும் உதவியை நாடுதல், கொடுத்தல் அல்லது பெற்றுக்கொள்ளுதல் என்பன இலங்கையில் தடைசெய்யப் பட்டுள்ளது.

அணு ஆயுதங்கள் மற்றும் ஏனைய வெடிப்பொருள் கருவிகள் மீதான தடை.

(2) ஆளெவரும்:-

(அ) அணு ஆயுதங்களில் ஆராய்ச்சி மேற்கொள்ளுதல், அவற்றை விருத்தி செய்தல், கொள்ளுதல், உற்பத்தி செய்தல், உடைமையில் வைத்திருத்தல், களஞ்சியப் படுத்தல், இடம்பெயர்த்தல், கைமாற்றுதல் அல்லது பயன்படுத்தல் ஆகாது;

(ஆ) அணு ஆயுதங்களை தயாரிக்கும் நோக்கத்துக்காக, அணுப் பொருட்களின் மீது ஆராய்ச்சி மேற்கொள்ளு தல், அவற்றை விருத்தி செய்தல், கொள்ளுதல், உற்பத்தி செய்தல், உடைமையில் வைத்திருத்தல், களஞ்சியப் படுத்தல், இடம்பெயர்த்தல், கைமாற்றுதல் அல்லது பயன்படுத்தல் ஆகாது;

(இ) மேலேயுள்ள (அ) அல்லது (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் எவற்றிலும் பங்குபற்றுதலோ, அவற்றிற்கு உதவுதலோ அல்லது நிதியுதவியளித்தலோ ஆகாது.

*(3)* ஓராம் உட்பிரிவுக்கு அல்லது *(2)* ஆம் உட்பிரிவுக்கு முரணாக செயற்படுகின்ற ஆள் எவரும், தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இருபது ஆண்டுகளை விஞ்சாத வொரு காலப்பகுதிக்கான மறியற்தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

## அத்தியாயம் IX

### அணுப்பொருள் மற்றும் ஏனைய கதிரியக்கப் பொருட்களின் பௌதீகப் பாதுகாப்பு

*அணுப் பொருட்களினதும் ஏனைய கதிரியக்கப் பொருட்களினதும் பௌதீக ரீதியிலான பாதுகாப்புக்கான தேவைப்பாடுகள்.*

**63.** *(1)* பேரவையானது, அணுப் பொருளினதும் ஏனைய கதிரியக்கப் பொருளினதும் பௌதீக ரீதியிலான பாது காப்புக்காக பின்வருவன உட்பட்ட தேவைப்பாடுகளை நிலை நாட்டுதல் வேண்டும்:-

(அ) உரிமமளிக்கப்பட்ட பயன்பாடுகளிலிருந்து அல்லது அணுப் பொருள் மற்றும் ஏனைய கதிரியக்கப் பொருள் ஒத்தச் செயலிடத்தில் உற்பத்தி செய்யப்படுகின் றனவோ, பதனிடப்படுகின்றனவோ, பயன்படுத்தப்படு கின்றனவோ, கையாளப்படுகின்றனவோ களஞ்சியப் படுத்தப்படுகின்றனவோ அல்லது கையுதிர்க்கப்படு கின்றனவோ அந்தச் செயலிடத்தில் நாசவேலைகளில் குறித்த வகையினதானதும் அளவினதானதுமான பொருட்களின் திருட்டிலிருந்து அல்லது திசை திருப்புவதிலிருந்து விளையக்கூடிய சேதத்தின் மதிப் பீட்டின் அடிப்படையில் நாசவேலை மூலம் ஏற்படக்கூடிய சேதத்தின் மதிப்பீட்டை அடிப் படையாக கொண்டு வகுதிப்படுத்துதல்;

(ஆ) வெவ்வேறு வகுதியளவான அணுப்பொருளுக்கு மற்றும் ஏனைய கதிரியக்கப் பொருளுக்கு அவசியமான பாதுகாப்பு மற்றும் காப்பு வழிமுறைகள்; அத்துடன்

(இ) அணுப்பொருள் மற்றும் வேறு கதிரியக்கப் பொரு ளுக்கான கணக்கீடும் கட்டுப்பாட்டு வழிமுறைகளும்.

*(2)* ஓராம் உட்பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட தேவைப்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

உரிமம் பெற்றவரின் பௌதீக பாதுகாப்புப் பொறுப்புடைமைகள்.

**64.** *(1)* உரிமம் பெற்றவருக்குச் சொந்தமான அணுப்பொருள் அல்லது வேறு கதிரியக்கப் பொருள் திருடப்பட்டு கொள்ளை யிடப்பட்டு அல்லது களவாட, கொள்ளையிட அல்லது இழக்க எத்தனிக்கப்படுமிடத்து உரிமம் பெற்றவர்.

(அ) அச்சம்பவமும் அதன் சூழ்நிலைகளும் பற்றி உடனடியாக பேரவைக்கு அறிவித்தல் வேண்டும்;

(ஆ) அறிவித்தல் கொடுத்த பின்னர் செயல்முறைக்குகந்தளவு விரைவில், திருடப்பட்ட அல்லது காணாமற்போன அணுப்பொருள் அல்லது ஏனைய கதிரியக்கப் பொருள் பற்றி விபரங்கள் உள்ளடங்கிய எழுத்திலான அறிக்கையை பேரவைக்கு வழங்குதல் வேண்டும்;

(இ) பேரவையினால் தேவைப்படுத்தக்கூடியவாறான ஏதேனும் மேலதிக தகவலை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) உணர்வுகளை தூண்டுகின்ற தகவலின் பாதுகாப்பையும் அந்தரங்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும்.

*(2)* ஓராம் உட்பிரிவினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறும் உரிமம் பெற்றவரொருவர் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகுதலும் வேண்டும்.

*சர்வதேச ஒத்துழைப்பும் உதவியும்.*

**65.** *(1)* இலங்கைக் குடியரசினுள் ஏதேனும் அணுப்பொருள் அல்லது வேறு கதிரியக்கப் பொருள் திருடப்பட்டு கொள்ளை யிடப்பட்டு அல்லது திருட அல்லது கொள்ளையிட எத்தனிக் கப்பட்டு உள்ளவிடத்து, பேரவையானது அத்தகைய சம்பவத்தின் விளைவொன்றினால் பாதிக்கப்படக்கூடிய வேறு அரசுகளுக்கு அல்லது சர்வதேச ஒழுங்கமைப்புக்களுக்கு இயலுமான விரைவில் அறிவித்தல் வேண்டும்.

*(2)* ஏதேனும் அணுப்பொருள் அல்லது வேறு கதிரியக்கப் பொருள் திருடப்படும், கொள்ளையிடப்படும் அல்லது காணாமற் போகும்பட்சத்தில், பேரவையானது, அவற்றை மீளப்பெற அவசியமான தோதான அனைத்து நடவடிக்கைகளையும், இயைபான திணைக்களங்களுடனும், முகவராண்மைகளுடனும் ஒத்துழைத்து எடுத்தல் வேண்டும்.

*(3)* பேரவையானது அம்முகவராண்மையினால் தாபிக்கப்பட்ட அத்தகைய ஏற்பாடுகளின் கீழான சர்வதேச அணுசக்தி முகவராண் மைக்கு ஏதேனும் அணுப்பொருள் அல்லது வேறு கதிரியக்கப் பொருளின் திருட்டு அல்லது கொள்ளையின் அல்லது திருட்டில் அல்லது கொள்ளையில் அல்லது காணாமற்போனமையின் தொடர்புபட்ட சம்பவங்களின் மீதான தகவலை வழங்குதல் வேண்டும்.

*கதிரியக்கப் பொருளை அல்லது அணுப் பொருளை அல்லது கதிரியக்கப் பொருள் அல்லது அணுப்பொருள் அடங்கிய கருவியை கையாடுதல் தவறாதல்.*

**66.** *(1)* பின்வருவனவற்றை செய்யும் ஆள் ஒருவர், அதாவது:-

(அ) ஏதேனும் அணுப்பொருளை அல்லது வேறு கதிரியக்கப் பொருளை அல்லது அணுப்பொருள் அல்லது வேறு கதிரியக்கப் பொருள் அடங்கியுள்ள கருவியொன்றின் திருட்டை அல்லது கொள்ளையைப் புரிகின்ற, அதற்கு உதவுகின்ற மற்றும் உடந்தையாகவிருக்கின்ற அல்லது புரிய எத்தனிக்கின்றவரும்;

(ஆ) ஏதேனும் அணுப்பொருளை அல்லது வேறு கதிரியக் கப் பொருளை அல்லது அணுப்பொருள் அல்லது வேறு கதிரியக்கப் பொருள் அடங்கிய கருவியொன்றை கையாடுகின்றவரும், கையாடுவதற்கு உதவுகின்றவரும் அல்லது உடந்தையாகவிருக்கின்றவரும் அல்லது கையாடுவதற்கு எத்தனிக்கின்றவரும்; அல்லது

(இ) சட்டமுறையான அதிகாரம் இன்றி, இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே அணுப்பொருளை அல்லது வேறு கதிரியக்கப் பொருளை கொண்டு செல்வதாக, அனுப்புவதாக அல்லது அகற்றுவதாக அமையும் ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரும், செய்வதற்கு உதவுகின்ற, உடந்தையாகவிருக்கின்ற அல்லது புரிய எத்தனிக்கின்றவரும்

தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகுதலும் வேண்டும்.

(2) எவரேனும் ஆளுக்கு மரணத்தை அல்லது கடுமையான உடல் ஊறை ஏற்படுத்தும் அல்லது ஆதனத்திற்கு அல்லது சூழலுக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்தும் எண்ணத்துடன், விடயத்திற்கேற்ப, அணுப்பொருளை அல்லது வேறு கதிரியக்கப் பொருளை பெறுகின்ற, உடைமை கொள்ளுகின்ற, கைமாற்றுகின்ற, இடம்பெயர்க்கின்ற, மாற்றுகின்ற, பயன்படுத்துகின்ற, அல்லது கையுதிர்க்கின்ற அல்லது அத்தகைய பொருள் அடங்கிய கருவியொன்றை உடைமையில் வைத்திருக்கின்ற எவரும், தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன் மேல்நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்துக்கு அல்லது இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாகுதலும் வேண்டும்.

(3) எவரேனும் ஆளுக்கு மரணத்தை அல்லது கடுமையான உடல் ஊறை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்தும் சாத்தியம் கொண்டதாக அல்லது ஆதனத்திற்கு அல்லது சூழலுக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்துகின்றதாக அல்லது ஏற்படுத்தும் சாத்தியம் கொண்டதாக விடயத்திற்கேற்ப, அணுப்பொருளை அல்லது வேறு கதிரியக்கப் பொருளை சட்டமுறையான அதிகாரமின்றி பெறுகின்ற, உடைமை கொள்ளுகின்ற, கைமாற்றுகின்ற,

இடம்பெயர்க்கின்ற, மாற்றுகின்ற, பயன்படுத்துகின்ற அல்லது கையுதிர்க்கின்ற அல்லது அத்தகைய பொருள் அடங்கிய கருவி யொன்றை உடைமையில் வைத்திருக்கின்ற எவரும் தவறொன் றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், மேல்நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகுதலும் வேண்டும்.

(4) நாட்டின் பாதுகாப்புக்கு அல்லது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய அல்லது பொதுமக்களின் உடனலத்திற்கு அல்லது சூழலுக்கு ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் செயலை செய்யுமாறு அல்லது செய்யாதிருக்குமாறு எவரேனும் ஆளையோ, சர்வதேச ஒழுங்கமைப்பொன்றையோ அல்லது ஒரு அரசையோ அல்லது செய்யுமாறு கட்டாயப்படுத்தும் பொருட்டு அவ்வாறு செய்கின்ற (1) ஆம், (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவுகளின் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்றைப் புரிகின்ற அல்லது புரிய எத்தனிக் கின்ற எவரும், மேல்நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படு வதன் மேல், பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத் துக்கு அல்லது இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக் கான மறியற்தண்டனைக்கு, புரியப்பட்ட தவறின் கடுமையான தன்மையைப் பொறுத்து ஆளாகுதலும் வேண்டும்.

(5) அச்சுறுத்தல் மூலம் அல்லது பலாத்காரத்தை பிரயோகிப் பதன் மூலம் அல்லது வேறு ஏதேனும் வடிவத்திலான பயமுறுத்தல் மூலம் ஏதேனும் கதிரியக்கப் பொருளை அல்லது அணுப்பொருளை அல்லது அணுப்பொருள் அல்லது கதிரியக்கப் பொருளை கொண்டுள்ள கருவியை கோரும் ஆள் எவரும் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற் றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகுதலும் வேண்டும்.

**67.** எவரும், சட்டமுறையான அதிகாரமின்றி ஏதேனும் கதிரியக்கப் பொருளை அல்லது அணுப்பொருளை பயன்படுத்தி அல்லது எம்முறையிலும் பரப்பி அல்லது கதிரியக்கப் பொருள் அல்லது அணுப்பொருள் அல்லது அடங்கியுள்ள கருவியொன்றைப் பயன்படுத்தி:-

*கதிரியக்கப் பொருளை அல்லது அணுப் பொருளை அல்லது அத்தகைய பொருள் அடங்கியுள்ள கருவிகளை சட்டமுறையற்ற வகையில் பயன் படுத்துதல் தவறொன்றாதல்.*

(அ) எவரேனும் ஆளுக்கு மரணத்தை அல்லது உடல் ஊறை அல்லது ஆதனத்திற்கு அல்லது சூழலுக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்துமிடத்து அல்லது ஏற்படுத்தும் சாத்தியமுள்ளவிடத்து;

(ஆ) நாட்டின் பாதுகாப்புக்கு அல்லது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் அல்லது பொதுமக்கள் உடநலத்திற்கு அல்லது சூழலுக்கு ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்தும் ஏதேனும் செயலை செய்யுமாறு அல்லது செய்யாதிருக்குமாறு எவரேனும் ஆளை சர்வதேச ஒழுங்கமைப்பொன்றை அல்லது அரசொன்றை கட்டாயப்படுத்தும் பொருட்டு; அல்லது

(இ) பந்தி (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட செயலொன்றைப் புரிவதற்கு அச்சுறுத்துமிடத்து,

தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன் மேல்நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற் தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும்.

**68.** (1) எவரேனும் ஆளுக்கு மரணத்தை அல்லது கடுமையான உடல் ஊறை அல்லது ஆதனத்திற்கு அல்லது சூழலுக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்தும் உட்கருத்துடன் அல்லது தெரிந்து கொண்டு பொருளின் வெளியிடுகையொன்றின் வெளிவிடுகை அல்லது ஆபத்தை ஏற்படுத்தும் ஒரு முறையில் ஏதேனும் கதிர்ப்பிறக்க நிறுவுகையைப் பயன்படுத்துகின்ற, அல்லது சேதப்படுத்துகின்ற அல்லது அதன் தொழிற்பாட்டில் இடையீடு செய்கின்ற அல்லது அதற்கு எதிராக வேறு ஏதேனும் செயலைப் புரிகின்ற ஆள் எவரும், தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன் மேல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும்.

*கதிரியக்கப் பொருளை வெளிவிடும் அபாயத்தை ஏற்படுத்துகின்ற கதிர்ப்பிறக்க நிறுவுகையைப் பயன்படுத்தல் அல்லது சேதப்படுத்தல்.*

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலை புரிவதற்கு அச்சுறுத்துகின்ற ஆளெவரும், தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாகுதலும் வேண்டும்.

## அத்தியாயம் X

### கனியமெடுத்தலும் பதனிடலும்

*கனியமெடுத்தல் மற்றும் பதனிடுதல் தொழிற் பாடுகளுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளில் வழங்கப் படவேண்டிய பாதுகாப்பு.*

**69.** (1) பேரவையானது கதிரியக்கப் பொருட்களைப் பிறப்பிக்கும் கனியமெடுத்தல் அல்லது பதனிடுதல் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை நடாத்தும் அனைத்து ஆட்களுடன் இணங்கியொழுகப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட வேலையாட்கள், பொதுமக்கள் மற்றும் சூழல் என்பவற்றின் பாதுகாப்புக்கான தேவைப்பாடுகளை அதற்கென ஆக்கப்படும் விதிகள் மூலம் நிறுவுகை செய்தல் வேண்டும்;

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட எவையேனும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு தேவைப் படுத்தப்பட்டு அத்தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் நீதிமன்றத்தின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகுதலும் வேண்டும்.

# பாகம் III

## அத்தியாயம் XI

### சபையினதும் பேரவையினதும் பணியாட்டொகுதி

*இப்பாகத்தில் பயன் படுத்தப்படும் "இயைபான அதிகாரசபை" என்னும் சொல்லமைப்பின் பொருள்.*

**70.** இச்சட்டத்தின் இப்பாகத்தின் (அத்தியாயம் XI, XII, XIII) நோக்கங்களுக்காக "இயைபான அதிகாரசபை" என்னும் சொல்லமைப்பு விடயத்திற்கேற்ப சபை அல்லது பேரவை எனப் பொருள்படும்.

*பணிப்பாளர் தலைமை யதிபதியை நியமித்தல்.*

**71.** (1) அமைச்சர், இயைபான அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் -

(அ) சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாக அணு அறிவியல் மற்றும் தொழிநுட்பவியல் துறையில்; அத்துடன்

(ஆ) பேரவையின் பணிப்பாளர் தலைமையதிபதியாக அணுசக்தி ஒழுங்குபடுத்தும் விடயங்கள், கதிரியக்கப் பாதுகாப்பு மற்றும் காப்பு, நிருவாகம் அல்லது சட்டம் ஆகிய துறையில் (இவ்வத்தியாயத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்.)

கல்விசார் தகைமைகளையும் பரந்த அனுபவத்தையும் கொண்டுள்ள ஆளொருவரை அதேபோன்ற முறையில் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி சம்பந்தப்பட்ட இயைபான அதிகாரசபையின் பொதுவான பணிப்புக்களுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட இயைபான அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றுக்கு பொறுப்புடையவராதலும் வேண்டும்:-

(அ) இயைபான அதிகாரசபையினதும் அதன் ஒழுங்கமைப்புக்களினதும் அலுவல்களின் நிருவாகம் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தலும், பணிகளை புரிதலும்; அத்துடன்

(ஆ) சம்பந்தப்பட்ட இயைபான அதிகாரசபையின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீது பொதுவான கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளை விஞ்சாததும் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறானதுமான அத்தகைய காலப்பகுதிக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர்

பதவியிலிருந்து அகற்றப்பட்டாலேயொழிய, பணிப்பாளர் தலைமையதிபதி என்றவாறு அவரது பதவிக்காலத்தின் போது அவரது செயல்நிறைவேற்றத்தை கருத்திற்கொண்டு, சம்பந்தப்பட்ட இயைபான அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் மீள நியமிக்கப்படலாம்.

(4) இயைபான அதிகாரசபையின் அலுவலர் ஒருவர் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய அலுவலர், பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்ட நேரத்தில் வகித்த பதவியிலிருந்து, பணிப்பாளர் தலைமையதிபதியாக பதவிவகிக்கும் காலப்பகுதிக்கு விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(5) (அ) பணிப்பாளர் தலைமையதிபதி இயைபான அதிகாரசபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன், அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அவரது தத்துவங்களையும் பணிகளையும் இயைபான அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம்;

(ஆ) அத்தகைய தத்துவம் அல்லது பணி கையளிக்கப்பட்ட அலுவலர் பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்புகளுக்கு அமைவாக அவற்றைப் பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி சம்பந்தப்பட்ட இயைபான அதிகாரசபையின் கூட்டங்களில் வருகை தருதல் வேண்டும், ஆனால் அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்க உரிமையுடையவராகுதல் ஆகாது.

பணிப்பாளர் தலைமையதிபதியை அகற்றுல்.

**72.** (1) அமைச்சர் தோதான விசாரணை நடாத்திய பின்னர் இயைபான அதிகாரசபையின் விதப்புரையின்பேரில் பின்வருவனவற்றிற்காக பணிப்பாளர் தலைமையதிபதியை அவருடைய பதவியிலிருந்து பதவியகற்றலாம்.

(அ) அவர் தமது பதவியின் கடமைகளையும் பணிகளையும் நிரந்தரமாகப் புரிய இயலாதவராகுமிடத்து;

(ஆ) அவர் இயைபான அதிகாரசபையின் குறிக்கோள்களுக்கு வெளிப்படையாக எதிராக ஏதேனும் செயலை புரிந்துள்ளவிடத்து, அல்லது அத்தகைய அதிகார சபையின் அக்கறைகளுக்கு பாதகமான முறையில் செயற்பட்டுள்ளவிடத்து ; அல்லது

(இ) இயைபான அதிகாரசபையினால் வழங்கப்படும் எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அத்தகைய அலுவலர், பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்படும் நேரத்தில் அத்தகைய அலுவலர் பதவி வகிக்கும்போது மீளப் பதவியை ஏற்பதற்கு உரித்துடையவராக்கப்படுவதற்கான உரிமையுடையவராதலாகாது.

*இயைபான அதிகாரசபையின் பணியாட் டொகுதியின் நியமனம்.*

**73.** (1) இயைபான அதிகாரசபையானது, உசிதமானதெனக் கருதக்கூடியவாறான, இயைபான அதிகாரசபையின் பணியாட் டொகுதிக்கு அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும், அத்தகைய அலுவலர்களினதும் சேவையாட்களினதும் மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு உள்ளிட்ட, இயைபான அதிகார சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான சேவையின் அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் நிதி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சரின் ஒருமைப்பாட்டுடனும் இயைபான அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய ஊதியங்களும் மற்றும் வேறு நலன்களும் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இயைபான அதிகாரசபையானது அதன் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நலன்களுக்கென சேமலாப நிதியங்களை அல்லது திட்டங்களை தாபித்தலும் ஒழுங்குபடுத்தலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய நிதியங்களுக்கு அல்லது திட்டங்களுக்கு உதவுதொகைகளைச் செலுத்துதலும் வேண்டும்.

*இயைபான அதிகார சபையின் பணியாட் டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களின் நியமனம்.*

**74.** (1) இயைபான அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலர், அத்தகைய அலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் இயைபான அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அந்த இயைபான அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் இயைபான அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் இயைபான அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக் குழுச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தயை அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துடன் ஓர் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ளவரான ஆள் ஒருவரை இயைபான அதிகாரசபை தொழிலுக்கமர்த்துமிடத்து, இயைபான அதிகாரசபைக்கு ஆற்றும் எவரேனும் சேவைக் காலப்பகுதியானது அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XII

### இயைபான அதிகாரசபையின் நிதிகள்

*இயைபான அதிகார சபையின் நிதியம்.*

**75.** (1) இயைபான அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அந் நிதியத்தில் பின்வருவன வரவு வைக்கப்படுதலும் வேண்டும்:-

(அ) சம்பந்தப்பட்ட இயைபான அதிகாரசபையின் பயன் பாட்டிற்கென காலத்திற்குக்காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய அனைத்து பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அவற்றின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் இயைபான அதிகார சபையினால் பெற்றுக்கொள்ளப்படக் கூடியவாறான அத்தகைய அனைத்து பணத்தொகைகளும்;

(இ) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இலங்கையினுள் அல்லது அதற்கு வெளியே இருக்கும் எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தான கடன்கள், நன்கொடைகள், கொடைகள், கையளிப்புக்கள், அல்லது மானியங்கள் என்றவகையாக இயைபான அதிகார சபையினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய அத்தகைய அனைத்து பணத் தொகைகளும் :

ஆயின், அளிக்கப்பட்ட அனைத்து வெளிநாட்டுக் கடன்கள், மானியங்கள், கொடைகள் மற்றும் நன்கொடைகள் தொடர்பில், நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தை இயைபான அதிகாரசபை பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், இலங்கையினுள் உள்ள ஏதேனும் மூலத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துக் கடன்களும், நன்கொடைகளும், கொடைகளும், கையளிப்புக்களும் மற்றும் மானியங்களும் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன்பின்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் இயைபான அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் கீழான கட்டணங்கள் அல்லது விதிப் பனவுகள் என்றவகையாக இயைபான அதிகாரசபை யினால் பெற்றுக்கொள்ளக்கூடியவாறான அத்தகைய அனைத்து பணத்தொகைகளும்.

(2) இயைபான அதிகாரசபையொன்றின் சுயாதீனத்தை விட்டுக் கொடுக்கச் செய்வதான அல்லது இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் ஒழுங்குபடுத்தற் பணியை நிறைவேற்றுவதில் அல்லது ஏதேனும் கடமையை புரிவதில் தலையிடுகின்றதான ஏதேனும் பணத் தொகையை கடன், கொடை, நன்கொடை, கையளிப்பு அல்லது வழங்கல் என்ற வகையாக, ஓர் உரிமம் பெற்றவரிடமிருந்து, வேறு எவரேனும் ஆளிடமிருந்து அல்லது ஆட்கள் குழுவிடமிருந்து இயைபான அதிகாரசபை பெற்றுக்கொள்ளுதல் ஆகாது.

(3) இச்சட்டத்தின் கீழ் இயைபான அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் இயைபான அதிகாரசபையினால் உறப்படும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப் படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் இயைபான அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

இயைபான அதிகாரசபையின் கணக்குகளை கணக்காய்வு செய்தல்.

76. (1) இயைபான அதிகாரசபையானது, அதன் சொத்துக் களும் பொறுப்புக்களும், வருமானமும் செலவினமும் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) இயைபான அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகுதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் இயைபான அதிகாரசபையொன்றின் கணக்குகளின் கணக் காய்வுக்கும் அது சம்பந்தமாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இயைபான அதிகாரசபையின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும், கணக்குகளுக்கும், அவை சம்பந்தமாகவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## அத்தியாயம் XIII

### நானாவிதமானவை

இயைபான அதிகாரசபையினால் செய்யப்படும் அல்லது செய்ய உத்தேசிக்கப்படும் ஏதேனும் ஒப்பந்தத்தில் உள்ள அக்கறையின் வெளிவிடுகை.

**77.** (1) இயைபான அதிகாரசபையினால் செய்யப்படும் அல்லது செய்ய உத்தேசிக்கப்படும் ஏதேனும் ஒப்பந்தத்தில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாதோ அக்கறை கொண்டவரான அத்தகைய இயைபான அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர், அத்தகைய நிகழ்வு அவரது அறிவுக்கு எட்டிய பின்னர் சாத்தியமானளவு விரைவாக அக்கறையின் தன்மை பற்றி இயைபான அதிகாரசபையின் கூட்டமொன்றில் வெளியிடுதல் வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றார்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் இயைபான அதிகாரசபையின் உறுப்பினரொருவர் செய்யப்படும் வெளிவிடுகை எதுவும் அத்தகைய இயைபான அதிகாரசபையின் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பில் பதியப்படுதல் வேண்டும் என்பதுடன் சம்பந்தப்பட்ட உறுப்பினர்:-

(அ) அத்தகைய வெளிவிடுகை தொடர்புபடுத்தும் ஒப்பந்தம் தொடர்பில் இயைபான அதிகாரசபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் கலந்துகொள்ளுதல் ஆகாது; அத்துடன்

(ஆ) அத்தகைய கலந்தாராய்வு அல்லது முடிபு எடுக்கப்படவுள்ள இயைபான அதிகாரசபையின் ஒரு கூட்டத்திற்கு தேவையான கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிக்கும் நோக்கத்துக்கு நிராகரிக்கப்பட்டவராகுதல் வேண்டும்.

இயைபான அதிகாரசபையொன்றுக்கு காணியைக் கொள்ளுதல்.

**78.** இயைபான அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்துக்கு காணி எதுவும் தேவைப்படுமிடத்து அத்தயை நோக்கமானது (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளல் சட்டத்தின் நோக்கத்துக்காக ஒரு பொது நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இயைபான அதிகாரசபைக்காக அரசாங்கத்தி

னால் அச்சட்டத்தின் கீழ் கொள்ளப்படலாம் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய கொள்ளலுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*துடர்ச்சி அல்லது குற்ற வழக்கிலிருந்து இயைபான அதிகார சபையின் உறுப்பினர்களுக்கும் அலுவலர்களுக்கும் பாதுகாப்பளித்தல்.*

**79.** (1) இச்சட்டத்தின்கீழ் இயைபான அதிகாரசபை மீது விதிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தைப் பிரயோகிப்பதில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட எதற்குமாக இயைபான அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது அத்தகைய உறுப்பினரால் அல்லது அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் ஆகியோருக்கு எதிராக, குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்புடைமை எதுவும் தொடரப்படுதல் ஆகாது,

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் இயைபான அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராக கொணரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவ் இயைபான அதிகாரசபையினால் உறப்பட்ட செலவுகள் இயைபான அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் இயைபான அதிகாரசபையினால் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுத் தொகை எதுவும் இயைபான அதிகாரசபையின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இயைபான அதிகாரசபையின் உறுப்பினர் அல்லது அலுவலர் அல்லது விடயத்துக்கேற்ப அத்தகைய உறுப்பினரால் அல்லது அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் இச்சட்டத்தின் கீழ் அவரால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் அவருக்கெதிராக கொணரப்பட்ட துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளித்தால், அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அத்தகைய செலவினங்கள் அறவிடப்பட்டாலன்றி, இயைபான அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*தவறுகளும் தண்டங்களும்.*

***80.*** *(1)* இச்சட்டத்தின் கீழ் பேரவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதில் அல்லது பணியைப் புரிவதில் அத்தகைய எவரேனும் உறுப்பினருடன் அல்லது அலுவலருடன் தலையிடும் அல்லது அவருக்கு முட்டுக் கட்டையிடும் அல்லது அவர்மீது தகாத செல்வாக்கு அல்லது கட்டாயத் தூண்டுதல் எதனையும் பிரயோகிக்கும் செயல் எதனையும் ஆளொருவர் செய்தல் ஆகாது.

*(2)* *(அ)* இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியின் அல்லது ஒழுங்குவிதியின் கீழ் ஏதேனும் கடமையை, பணியை அல்லது தத்துவத்தைப் புரிவதில், நிறைவேற்றுவதில் அல்லது பிரயோகிப்பதில் இயைபான அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு வேண்டுமென்று முட்டுக்கட்டையிடும் அல்லது இடையூறுசெய்யும்;

*(ஆ)* இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியின் அல்லது ஒழுங்குவிதியின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை, அத்தகைய தகவல் குறித்த ஏதேனும் விடயத்தில் பொய்யானதென அல்லது பிழைவழியுய்ப்பதென தெரிந்து கொண்டு அளிக்கும்; அல்லது

*(இ)* இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியின் அல்லது ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது இயைபான அதிகாரசபையின் ஏதேனும் முடிபுக்கு முரணாக அல்லது மீறிச் செயலாற்றும்,

எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்

படுவதன் மேல், அத்தகைய தவறுக்கு தண்டம் எதுவும் இச்சட்டத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட விதியினால் அல்லது ஒழுங்கு விதியினால் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டில்லாதவிடத்து, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் அல்லது பங்காண்மையினால் புரியப்படும் தவறுகள்.

**81.** இச்சட்டத்தின் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் விதியின் அல்லது ஒழுங்குவிதியின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆட்கள் குழு–

(அ) கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இருக்குமிடத்து, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலருமாக ; அல்லது

(ஆ) பங்காண்மையாகவிருக்குமிடத்து, அத்தகைய பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளரும் அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்:

ஆயின் விடயத்திற்கேற்ப, ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலரொருவரும் அல்லது ஒரு பங்காண்மையின் பங்காளர், அத்தகைய தவறு அவரது அறிவுக்கு எட்டாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவசியமான உரிய விழிப்புக்கவனம் யாவும் அவர் அல்லது அவள் பிரயோகித்தார் என நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தால், அத்தகைய தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

**82.** (1) இயைபான அதிகாரசபையின் ஒவ்வோர் உறுப்பினரும், இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவும், மதியுரைக் குழுவொன்றும் மேன்முறையீட்டுக் குழுவும் இயைபான அதிகாரசபையின் அனைத்து அலுவலர்களும் தமது கடமைகளைப் பொறுப்பேற்க முன்னர், இயைபான அதிகாரசபையின் தொழிற்பாடு சம்பந்தமான அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கண்டிப்பான இரகசியம் பேண உறுதியளிக்கும் வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்தல் மூலம் இச்சட்டத்தின் கீழான அவரது கடமைகளை நிறைவேற்றுவதில், பணிகளைப் புரிவதில் தமது அறிவுக்கும் எட்டும் தகவல் எதனையும்:- இரகசியத்தை வெளிப் படுத்துதல்.

(அ) அது இச்சட்டத்தின் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் விதியின் அல்லது ஒழுங்குவிதியின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகும் பொருட்டு தவிர ; அல்லது

(ஆ) நீதிமன்றச் சட்டத்தினால் கட்டளையிடுமிடத்து தவிர,

வெளியிடுதல் ஆகாது.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும், இயைபான அதிகாரசபையின், இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு குழுவின், மதியுரைக் குழுவின் அல்லது மேன்முறையீட்டுக் குழுவின் ஓர் உறுப்பினருக்கு, இயைபான அதிகாரசபையின் ஒரு நிபுணருக்கு, அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகருக்கு அல்லது எவரேனும் அலுவலருக்கு 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தினால் அல்லது அச்சட்டத்தின் கீழ் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளை மீறி ஏதேனும் தகவலை வெளியிட அல்லது ஏதேனும் செயலை செய்ய அதிகாரமளிப்பதாக வாசிக்கப்படுதலோ பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

*82ஆம் பிரிவின் மீறுகை தவறொன்றாதல்.*

**83.** பிரிவு 82 (1) என்பதனை மீறிச் செயலாற்றுகின்ற இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இயைபான அதிகாரசபையின், ஏதேனும் குழுவின், ஒரு மதியுரைக் குழுவின் மற்றும் மேன்முறையீட்டுக் குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் மற்றும் இயைபான அதிகாரசபையின் ஒரு நிபுணர், அதிகாரமளிக் கப்பட்ட அலுவலர் அல்லது எவரேனும் அலுவலர் தவறொன் றைப் புரிகின்றவராதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக் கான மறியற்தண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*இயைபான அதிகார சபையின் அலுவலர் களும் சேவையாளர் களும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்.*

**84.** இயைபான அதிகாரசபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல் லைக்குள்ளும் நோக்கத்துக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் நோக்கங் களுக்காக இயைபான அதிகார சபையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**85.** இயைபான அதிகாரசபை இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல் லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படு தல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற் கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*ஒழுங்கு விதிகள்.*

**86.** (1) அமைச்சரானவர் இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக் கப்படத் தேவைப்படுத்தப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆக்குவதற்கு அதிகார மளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்கும் பங்கமின்றியும், அமைச்சர் பின்வரும் விடயங்கள் யாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) கதிரியக்கப் பொருளை அல்லது கதிரியக்க மூலங்களை ஏற்றுமதிசெய்தல், இறக்குமதி செய்தல், மீள ஏற்றுமதி செய்தல், களஞ்சியப்படுத்தல், கனியமெடுத்தல், பதனிடல், வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், நிருமாணித்தல், இணைத்தல், கொள்ளல், பகிர்ந்தளித்தல், விற்பனைசெய்தல், குத்தகைக்கு கொடுத்தல், வாடகைக்கு விடுதல், பெற்றுக்கொள்ளுதல், அமர்த்தல், இடம் அமைத்தல், தொழிற்படுத்தல், உடைமையில் வைத்திருத்தல், தொழிற்பாடு நிறுத்துதல், இணைப்பகற்றல், பயன்படுத்தல் அல்லது கையுதிர்த்தல் அத்துடன் கதிர்ப்பிறக்க உபகரணத்தை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், இடம் அமைத்தல், உடைமையில் வைத்திருத்தல், பயன்படுத்தல், ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தல்;

(ஆ) கதிர்ப்பிறக்க நிறுவுகைகளின் தொழிற்பாட்டை நிறுத்திவைத்தல்;

(இ) அயனாக்கற் கதிர்வீச்சின் பாதகமான விளைவுகளுக்கு எதிராக மருத்துவக் கண்காணிப்பும் அயனாக்க கதிர்வீச்சின் தொழில்சார் வெளிப்படுத்தல் உள்ளடங்கிய கதிர்வீச்சு வேலையாட்கள் பாதுகாத்தல் ;

(ஈ) அயனாக்க கதிர்வீச்சின் பாதகமான பாதிப்புக்களுக்கெதிராக பொதுமக்களையும், சூழலையும் பாதுகாத்தல்;

(உ) நோயாளிகளைப் பாதுகாத்தல் உள்ளிட்ட அயனாக்கற் கதிர்வீச்சு சம்பந்தப்பட்ட மருத்துவச் செயல்முறைகளை ஒழுங்குபடுத்துதல்;

(ஊ) சூழலுக்குள் கழிவை வெளியிடுதல் உள்ளிட்ட கதிரியக்க கழிவு முகாமைத்துவத்தையும் பொதுமக்கள் உடனலத்தையும் பாதுகாப்பையும் பாதிக்கும் ஏதேனும் செயல்முறையையும் ஒழுங்குபடுத்துதல் ;

(எ) கதிரியக்க மூலங்களினதும், கட்டுப்படுத்தப்பட்ட இனங்களினதும் பாதுகாப்பு ; அத்துடன்

(ஏ) அயனாக்கற் கதிர்வீச்சுக்கு வெளிப்படுத்தல் காரணமாக ஏற்படும் ஏதேனும் ஊறு, சுகவீனம் அல்லது சேதத்திற்கு கதிர்வீச்சு வேலையாட்களுக்கு நட்டஈடு கொடுப்பனவுக்காக நட்டஈட்டுத் திட்டமொன்றை வகுத்தமைத்தல்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டு தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், பின்னர் வசதியானளவு விரைவில் அதன் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னிலையில் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**87.** (1) பேரவையானது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட விதிகள் அனைத்தும் அல்லது ஏதேனும் விடயம் தொடர்பில், குறிப்பாக பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக விதிகளை ஆக்கலாம்:- விதிகள்.

(அ) இலங்கையிலிருந்து அல்லது இலங்கையினுள் கதிரியக்கப் பொருள் மற்றும் கதிரியக்கக் கழிவை இடம்பெயர்ப்பதற்கு இணங்கியொழுக்கப்படவேண்டிய தேவைப்பாடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) அத்தகைய கதிரியக்கப் பொருளின் வகைகள், அளவுகள் மற்றும் செயற்பாட்டு மட்டங்களினால் ஏற்படுத்தும் சாத்தியம் கொண்ட ஆபத்துக்களை கவனத்திற்கெடுத்து, கதிரியக்கப் பொருளின் வகுதியினப்படுத்தலை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்;

(ii) கதிரியக்கப் பொருள் பாதுகாப்பாக இடம்பெயர்ப்பதற்கான சர்வதேச அணு சக்தி முகவராண்மையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்;

(iii) சர்வதேச அணுசக்தி முகவராண்மையினால் விதிக்கப்படும் நியமங்களுடன் ஒத்துப்போகும் கதிரியக்கப் பொருளின் பௌதீகப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் ;

(ஆ) சர்வதேச அணுசக்தி முகவராண்மையினால் விதித்துரைக்கப்படும் தவிர்ப்புக்களின் அளவுக் குறியீடுகள்;

(இ) அணு அல்லது கதிர்த்தொழிற்பாட்டு அவசரகால நிலைமைகளுக்கு தயார்படுத்தலும் முகங்கொடுத்தலும் ;

(ஈ) கதிர்வீச்சு வேலையாட்களின் தகைமைகளுக்கான கட்டளைக்கற்கள்;

(உ) பொதுமக்களினால் பயன்படுத்தப்படும் உணவிலும் வேறு ஏதேனும் பொருளிலும் உள்ள கதிர்தொழிற் பாட்டு செறிவு மட்டங்களை நிலைநாட்டுதல் ;

(ஊ) பொதுமக்களினால் பயன்படுத்தப்பட்ட உணவு மற்றும் வேறு இனங்கள் தொடர்பிலான மேலேயுள்ள கதிரியக்கத் தொழிற்பாட்டின் செறிவு மட்டங்களின் நிலைநாட்டுகையானது இலங்கையில் இறக்குமதி செய்வதற்கு அல்லது தயாரிப்பதற்கு அல்லது சந்தைப்படுத்துவதற்கு தடைசெய்யப்படுதல் வேண்டும்;

(எ) அணுசார் தொழினுட்பங்களின் பாதகமற்ற பயன்பாடு உள்ளிட்ட கதிர்வீச்சின் பாதுகாப்பு, மூலங்களின் காப்பு மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக கொள்கைகளையும், நியமங்களையும், நெறிக்கோவைகளையும் விருத்தி செய்தல் ; அத்துடன்

(ஏ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அவை தொடர்பில் குறிப்பான ஏற்பாடுகள் எவையும் செய்யப்பட்டில்லாததும், பாதுகாப்பு உடன் படிக்கையை பயனுறுத்துவதற்கு அவசியமான வையுமான தேவைப்பாடுகள்.

(2) பேரவையினால் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும் என்பதுடன் அத்த கைய வெளியிடப்படும் தேதியிலிருந்து அல்லது அத்தகைய விதியில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) பேரவையினால் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவில் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத விதி

எதுவும், அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, அதன் கீழ் அதன் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) விதி எதுவும் ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**88.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலே ஒழிய:- பொருள் கோடல்.

"சுற்றுப்புற ஊட்டு சமவலு வீதம் "எச்"(டி)" என்பது ஐசியுஆர் இயற்கைச் சூழலில் நேரொத்த இணைப்பு விரிவாக்க பரப்பெல்லையினால் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் இணைந்த பரப்பெல்லையின் எதிர்த்திசையில் ஒரு விட்ட ஆழத்தில் உருவாக்கப்படும் ஊட்டு சமவலு எனப் பொருளாகும் ;

"விபத்து" என்பது தொழிற்பாட்டு பிழைகள், உபகரணப் பிழைபாடுகள் மற்றும் ஏனைய இடர்பாடுகள் உள்ளிட்டவையும் அவற்றின் விளைவு அல்லது சாத்தியமான விளைவு பாதுகாப்பு மற்றும் காப்பு பொறுத்த மட்டில் புறக்கணிக்க முடியாதனவுமான எதிர்பாராத ஏதேனும் சம்பவம் எனப் பொருளாகும் ;

"தொழிற்பாடு நிறுத்துதல்" என்பது கதிர்ப்பிறக்க நிறுவுகை யின் தொழிற்பாட்டுக் காலம் முடிவில் அதைச் சேவையிலிருந்து இளைப்பாற்றுவதற்கென, வேலை யாட்களினதும் பொதுமக்களினதும் உடனலம் பாதுகாப்பு சூழல் பாதுகாப்புக்கு உரிய கவனஞ் செலுத்தி எடுக்கப்படும் செயற்பாடுகள் எனப்பொருள் படும். இது மூலங்களைப் பாதுகாப்பாக அகற்றுவதை யும் கையுதிர்ப்பதையும் உள்ளடக்கும் ;

"திசைப்படுத்திய ஊட்டுச் சமவலு வீதம்" என்பது ஐசிஆர்யூ இயற்கை சூழலில் நேரொத்த விரிவாக்க பரப்பெல்லை யினால் குறியிட்ட ஒரு காலப்பகுதியினுள் குறித்துரைக் கப்பட்ட திசையில் ஒரு விட்ட ஆழத்தில் உற்பத்தி செய்யப்படும் ஊட்டு சமவலு வீதம் எனப் பொருளாகும்;

"பயனுறு ஊட்டு" என்பது ஒவ்வொன்றும் தோதான இழைய எடைக் காரணியினால் பெருக்கப்பட்டு அனைத்து இழைய சமவலு ஊட்டுக்களின் கூட்டுத்தொகை என வரைவிலக்கணம் கூறப்பட்டதான அளவு ஈ எனப் பொருளாகும்,

ஈ = ∑ **டபிள்யூ ரி. எச். ரி**

இதில் ரி இழையத்தில் உள்ள சமவலு எச். ரி அத்துடன் ரிக்கான இழைய எடைக் காரணி டபிள்யூ.ரி ஆகும் ;

"வெளிப்படுத்தல்" என்பது, அயனாக்கற் கதிர்வீச்சு மூலம் கதிர்ப்பிறக்கத்துக்கு ஆளாகும் செயல் அல்லது நிலைமை எனப் பொருளாகும், இது ஒன்றில் (உடலுக்கு வெளியே மூலங்களின் காரணமாக அயனாக்கற் கதிர் வீச்சினால் ஏற்படும் கதிர்பிறக்கமாகிய) வெளிப்புற வெளிப்படுத்தலாக அல்லது (உடலுக்கு உள்ளே மூலங்களின் அயனாக்க கதிர்வீச்சினால் ஏற்படும் கதிர் பிறக்கமாகிய) உட்புற வெளிப்படுத்தலாக இருக்கலாம்;

"வசதி" என்பது கதிர்ப்பிறக்க நிறுவுகைகள் மற்றும் யூரேனிய கனிப்பொருள் சுரங்கங்கள், கதிரியக்கக் கழிவு, முகாமைத்துவ இடங்கள் பாதுகாப்பும் காப்பும் தேவைப்படக் கருதும் அத்தகைய அளவுக்கு கதிரியக்கப் பொருள் உற்பத்தி செய்யப்படும், பதினிடப்படும், பயன்படுத்தப்படும், கையாளப்படும், களஞ்சியப் படுத்தப்படும் அல்லது கையுதிர்க்கப்படும் வேறு ஏதேனும் இடங்கள் எனப் பொருளாகும் ;

"அணுப்பிணைப்புப் பொருள்" என்பது பின்வருவன தவிர்ந்த யூரேனியம் - 233, யூரேனியம் 235, புளுடோனியம் - 239, புளுடோனியம் 241 அல்லது இக்கதிர்வீச்சு நியூக்ளைட் டுகளின் ஒன்றிணைப்பு எனப் பொருளாகும் :-

(அ) இயற்கை யூரேனியம் அல்லது கதிர்பிறக்கப் படாத செறிவு தளர்ந்த யூரேனியம்; அத்து டன்

(ஆ) இயற்கை யூரேனியம் அல்லது வெப்பஞ்சார் எதிர்பியக்கிகளில் மட்டுமே கதிர்ப்பிறக் கப்பட்ட செறிவு குறைந்த யூரேனியம் ;

"மேல் நீதிமன்றம்" என்பது, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் பெயர் குறிக்கப்பட்டதும் கொழும்பு நீதி நிருவாகத்தில் நடாத்தப்படுவதுமான இலங்கையின் மேல் நீதிமன்றம் என்று பொருளாகும்;

"சம்பவம்" என்பது தொழிற்பாட்டு பிழைகள், சாதன பிழைகள், உபகரணப் பிழைபாடுகள், தூண்டற் சம்பவங்கள், விபத்து முன்னறி குறிகள், மயிரிழையில் தப்புதல் அல்லது ஏனைய இடர்பாடுகள் அல்லது அதிகாரமளிக்கப்படாத கெடுதல் நோக்கம் கொண்ட அல்லது கெடுதல் நோக்கமற்ற செயல் உள்ளிட்டமை யும், அவற்றின் விளைவுகள் அல்லது சாத்தியமான விளைவுகள், அயனாக்கற் கதிர்வீச்சிலிருந்து பாதுகாப்பு அல்லது காப்பை பொறுத்தமட்டில் புறக்கணிக்க இயலாத ஏதேனும் எதிர்பாராத சம்பவம் எனப் பொருளாகும் ;

"அயனாக்கற் கதிர்வீச்சு" என்பது உயிரியல் பொருளில் அயன்சோடிகளை உற்பத்தி செய்ய இயலத்தக்க கதிர்வீச்சு எனப் பொருளாகும்;

"கதிர்ப்பிறக்க உபகரணம்" என்பது ஏதேனும் அடையத்தக்க மேற்பரப்பிலிருந்து 50 மில்லிமீற்றர் தூரத்தில் 5 மைக்கிரோ கிறே/ மணித்தியாலத்திற்கு மேற்பட்ட கணநிலை உறிஞ்சல் ஊட்டை ஏற்படுத்தாத சாதாரண செயற்பாட்டு நிலைமைகளில் கதோட்டுக் கதிர்க்குழாய், கட்புலக் காட்சி உபாயம் போன்ற பிறப்பாக்கி மாத்திரம் இருக்கும் உபகரணம் நீங்கலாக, (ஒரு படியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட படிகளில்) ஐந்து கிலோவோற்றுக்கு மேற்பட்ட அழுத்த வித்தியாசத்தினூடாக வெற்றிடம்

பாத்திரம் ஒன்றில் மின்னேற்றப்பட்ட துணிக்கைகள் ஆர் முடுக்கப்படும் ஏதேனும் ஒரு தொகுதி, எல்லா வகை கதிர்ப் பொறிகளினதும் மின்னேற்றப்பட்ட துணிக்கை ஆர் முடுக்கிகளினதும் எல்லா வேலைகளும் கதிர்ப்பிறக்க கருவி ஆகும்;

"கதிர்ப்பிறக்க நிறுவுகை" என்பது துணிக்கை ஆர்முடுக்கியையோ, X கதிர்ப்பு உபகரணத்தையோ பெரிய தொழிற்பாட்டு வளத்தையோ கொண்டுள்ளதும், உயர் கதிர்ப்புப் புலங்களை உள்ளடக்கத்தக்கதுமான கட்டமைப்பு அல்லது நிறுவுகை, தகுந்தவாறு வடிவமைக்கப்பட்ட கட்டமைப்புக்கள் பரிசையிடலையும் வேறு பாதுகாப்பையும் அளிக்கின்ற அவற்றின் உயர் கதிர்ப்புப் புலத்தினுள்ளே கவனக்குறைவாகப் பிரவேசிப்பதைத் தடுக்கும் இடைப்பூட்டுக்கள் போன்ற காப்பு உபாயங்கள் இருக்கும். கதிர்ப்பு நிறுவனங்களின் புறக் கற்கைக் கதிர்ப்பு சிகிச்சைக்கான நிறுவுகைகள், வர்த்தகப் பொருள்களை கிருமியழிப்பதற்கான அல்லது பேணி வைப்பதற்கான நிறுவுகைகள், கைத்தொழிற் கதிர் வரைபியலுக்கான சில நிறுவுகைகள் எனப் பொருளாகும் ;

"உரிமம்" என்பது இச்சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்டவொரு செயல்முறை அல்லாத ஒரு செயல்முறையை நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பேரவையினால் வழங்கப்படும் ஓர் உரிமம் எனப் பொருளாகும் ;

"உரிமம்பெற்றவர்" என்பது, உரிமத்தை வைத்திருப்பவர் எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு குறித்தொதுக்கப்பட்டவரான அமைச்சர் எனப் பொருளாகும் ;

“அணுப் பொருள்” என்பது ஏதேனும் மூலப் பொருள் அல்லது ஏதேனும் விசேட அணுப்பிணைப்பு பொருள் எனப் பொருளாகும் ;

“அணு அல்லது கதிர்த் தொழிற்பாட்டு அவசரகால நிலைமை” என்பது பின்வருவன காரணமாக ஆபத்து உள்ள அல்லது ஆபத்து எதிர்நோக்கப்படும் அவசரகால நிலைமை எனப் பொருளாகும் :-

(அ) அணுத் தொடர் எதிர்விளைவினால் அல்லது அணுத்தொடர் விளைவின் உற்பத்திகள் அழிவதனால் ஏற்படும் சக்தி ; அல்லது

(ஆ) கதிர்வீச்சின் வெளிப்படுத்தல்;

“அணு ஆயுதங்கள்” என்பது அணுப்பிணைப்பு அல்லது அணுப்பிணைப்பு ஒன்றிணைதல் அல்லது ஒருங்கிணைவதனால் எழுகின்ற அணுசக்தி எதிர்ப்பினால் அழிவு ஆபத்து தரும் வெடிப்பொருள் செய்கருவி எனப் பொருளாகும் ;

“மிகை வெளிப்படுத்தல்” என்பது ஆளொருவர் பெறும் ஊட்டு விதித்துரைக்கப்பட்ட இயைபான ஊட்டு வரையறையை விட விஞ்சுவதாகவுள்ள வகையில் ஆளொருவரை அயனாக்க கதிர்வீச்சின் ஏதேனும் வெளிப்படுத்துதல் எனப் பொருளாகும் ;

“அயனாக்க கதிர்வீச்சில் உட்படுத்தும் செயல்முறை” என்பது மக்களுக்கான வெளிப்படுத்தல் அல்லது சாத்தியமான வெளிப்படுத்தல் அல்லது வெளிப்படுத்தலுக்கு உட்பட்ட மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யத் தக்கதாகக் கூடுதலான வெளிபடுத்தல் வளங்களை அல்லது வெளிப்படுத்தல் பாதைவழிகளைப் புகுத்தும் அல்லது சாட்டுதலான மக்களுக்கு வெளிப்படுத்தலை விரிவுபடுத்தும் அல்லது தற்போதுள்ள வளங்களிலிருந்து வெளிப்படுத்தல் பாதைவழிகளின் கிளைக் கோப்பினை மாற்றியமைக்கும் ஏதேனும் மனிதத் தொழிற்பாடு எனப் பொருளாகும் ;

“கதிர்வீச்சுப் பாதுகாப்பு” என்பது அயனாக்க கதிர்வீச்சின் வெளிப்படுத்தலின் விளைவுகளிலிருந்த ஆட்களைப் பாதுகாத்தலும் அதனை எய்துவதற்கான வழிவகைகளும் எனப் பொருளாகும் ;

“கதிர்வீச்சு வேலையாள்” என்பது முழுநேரம் அல்லது பகுதி நேர அல்லது தற்காலிக அடிப்படையில் ஒரு தொழில் தருநருக்காக வேலைக்கமர்த்தப்பட்டவரும் அவ்வாறு வேலைக்கமர்த்தப்பட்ட வேலையில் கதிர்வீச்சிலிருந்து அத்தகைய ஆளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்புடைமையுடைய தொழில்தருநரைச் சார்ந்ததாகவுள்ளவருமான எவரேனும் ஆள் எனப்பொருளாகும் ;

“கதிரியக்கப் பொருள்” என்பது பேரவையின் ஒழுங்குபடுத்தற் கட்டுப்பாட்டுக்கு அமைய அயனாக்க கதிர்வீச்சின் வெளிவிடும் ஏதேனும் பொருள் எனப் பொருளாகும் ;

“கதிரியக்க மூலம்” என்பது ஒரு பொதியுறையுள் நிரந்தரமாக மூடியடைக்கப்பட்ட அல்லது ஒரு திண்ம வடிவில் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டதும் ஒழுங்குபடுத்தற் கட்டுப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படாததுமான கதிரியக்கப் பொருள் எனப் பொருளாகும் என்பதுடன், கதிரியக்கம் மூலம் ஒழுகினால் அல்லது உடைந்தால், அவ்வாறு வெளியிடப்படும் ஏதேனும் கதிரியக்கப் பொருள் எனவும் பொருளாகும் ;

“கதிரியக்க கழிவு” என்பது கதிரியக்கப் பொருள் அடங்கிய அல்லது அதனால் மாசுற்ற செய்முறைகளிலிருந்து அல்லது தலையீடுகளிலிருந்து எஞ்சியிருப்பதும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுக நிறுவப்பட்ட மட்டத்தைவிட உயர்ந்த மட்ட கதிர்த் தொழிற்பாட்டை அல்லது கதிர்த்தொழிற்பாடு செறிவைக் கொண்டதும், அதன் மேற்கொண்டு பயன்பாடு எதுவும் எதிர்பார்க்கப்படாததுமான எத்தகைய பௌதீகப் படிவத்திலுமான பொருள் எனப் பொருளாகும் ;

"பாதுகாப்பு உடன்படிக்கைகள்" என்பது 1984 ஆம் ஆண்டு ஓகத்து 06 ஆம் தேதி வலுவுக்கு வந்த அணு ஆயுதங்களை பரவுதலைத் தடுப்பதன் மீதான சமவாயம் தொடர்பு பட்ட பாதுகாப்புக்களைப் பிரயோகிப்பதற்கென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சர்வதேச அணுசக்தி முகவராண்மைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளும் அதற்கான பின்னினைப்புகளும் எனப் பொருளாகும்;

"பாதுகாப்பு" என்பது அயனாக்க கதிர்வீச்சின் ஆபத்துக்களுக்கு எதிராக மக்களையும், சூழலையும் பாதுகாத்தலும், கதிர்வீச்சு இடராபத்துக்களை ஏற்படுத்தும் வசதிகளையும் செயற்பாடுகளையும் காத்தலும் எனப் பொருளாகும் ;

"காப்பு" என்பது அணுசார் அல்லது ஏனைய கதிர்க்கசிவுப் பொருளை அல்லது அவற்றின் வசதிகள் சம்பந்தப் பட்டதான களவாடல், நாசவேலை, அதிகாரமளிக் கப்படாத பிரவேசம், சட்ட விரோத கைமாற்றம் அல்லது ஏனைய கேடு எண்ணம் கொண்ட செயல்களை தடுப்பதும், கண்டு பிடிப்பதும் அவற்றிக்கு முகங் கொடுப்பதும் எனப் பொருளாகும் ;

"மூலம்" என்பது அயனாக்க கதிர்வீச்சை வெளியிடுதல் மூலம் அல்லது கதிரியக்க பொருளை விடுவிப்பதன் மூலம் கதிர்வீச்சை வெளிப்படுத்தலை ஏற்படுத்தும் எதுவும் எனப் பொருளாகும் ;

"மூலப்பொருள்" என்பது இயற்கைச் சூழலில் இடம்பெறும் இசோறேப் கலவை அடங்கிய யூரேனியம், இசோறோப் 235 செறிவு குறைக்கப்பட்ட யூரேனியம் சோடியம் மற்றும் உலோகம் அலோய், இரசாயனக் கலவை செறிவு படிவத்திலான மேற்போந்த எதுவும் காலத்துக்கு காலம் பேரவையில் தீர்மானிக்கப்படும், அத்தகைய செறிவு கொண்ட மேற்போந்த ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை அடங்கிய வேறேதே னும் பொருள் எனப் பொருளாகும் ;

"விசேட அணுப்பிணைப்பு பொருள்" என்பது புளுடோனியம் 239, யூரேனியம் 233, யூரேனியம் மூடிய ஐசோறோப் 235 அல்லது 233 மேற்போந்த ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை அடங்கிய ஏதேனும் பொருள் காலத்துக்காலம் பேரவை தீர்மானிக்கும். அத்தகைய ஏனைய அணுப்பினைப்பு பொருளாகும். ஆனால் மூலப்பொருள் உள்ளடக்காது ; அத்துடன்

"ஐசோறோப் 235 அல்லது 233 மதிப்பேற்றப்பட்ட யூரேனியம் என்பது ஐசோறோப் 235 அல்லது 233 இரண்டும் அடங்கியதும் இந்த ஐசோறோப்புக்களின் கூட்டுத்தொகை ஐசோறோப் 238 இற்கு கொண்டுள்ள மிகை விகிதமானது. ஐசோறேப் 235, ஐசோறேப் 238 இற்கு கொண்டுள்ள விகிதத்தைவிட அதிகமானதாக இருப்பதுமான யூரேனியம் எனப் பொருளாகும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**89**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## பாகம் IV

## அத்தியாயம் XIV

### நீக்கங்களும், பேணல்களும்

*1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதலும் ஏற்பாடுகளை பேணுதலும்.*

**90**. (1) (இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் நீக்கப்பட்ட சட்டம் என குறிப்பீடு செய்யப்படும்.) 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபை சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) 1969 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபை சட்டத்தின் நீக்கம் எது எவ்வா றிருப்பினும்:-

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர் முற்போந்த தேதியன்று பதவி வகிக்கின்ற அணு சக்தி அதிகாரசபையின் அனைத்து உறுப்பினர்களும் நியமித்த தேதியி லிருந்து பயனுறும் சபையின் உறுப் பினர்களாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர்கள் அதிகாரசபை யின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட பதவிக்காலத்தின் எஞ்சியுள்ள காலப் பகுதிக்கு அத்தகைய உறுப்பினர்களாக பதவி வகித்தல் வேண்டும்;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற் போந்த தேதியன்று அணுசக்தி அதிகாரசபைக்குச் சொந்தமாக இருந்த அனைத்து அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனமும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறு விடயத்திற் கேற்ப சபைக்கு அல்லது பேரவைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ;

(இ) அணுசக்தி அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபையுடன் செய்து கொள்ளப்பட்டு நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று வலுவிலுள்ள அனைத்து ஒப்பந்தங் களும் உடன்படிக்கைகளும் நியமிக்கப் பட்ட தேதியிலிருந்து சபையினால் அல்லது சபையுடன் அல்லது அமைச்ச ரால் தீர்மானிக்கப்பட்டவாறான

பேரவையினால் அல்லது பேரவையுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று அணுசக்தி அதிகாரசபையின் நிதியத்தின் வரவிலுள்ள அத்தகைய பணத்தொகை யாவும் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான விடயத்திற்கேற்ப சபையின் நிதியத்திற்கு அல்லது பேரவையின் நிதியத்திற்கு கைமாற்றப்படுதல் வேண்டும் ;

(உ) அணுசக்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்டும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளவையான அனைத்து அனுமதிப்பத்திரங்களும், புரிந்துணர்வு உடன்பாட்டு ஒழுங்குகளும் அல்லது ஒத்துழைப்பு உடன்பாட்டு ஒழுக்கங்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறு விடயத்திற்கேற்ப சபையினால் அல்லது பேரவையினால் முறையே வழங்கப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரங்கள், புரிந்துணர்வு உடன்பாட்டு ஒழுக்கங்களாக அல்லது ஒத்துழைப்பு உடன்பாட்டொழுக்கங்களாக கருதப்படுதல் வேண்டும் ;

(ஊ) அணுசக்தி அதிகாரசபையினால் அல்லது அதற்கு எதிராக தொடுக்கப் பட்டு நியமித்த தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ள அனைத்து வழக்குகளும், நடவடிக்கைகளும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, விடயத் திற்கேற்ப, சபையினால் அல்லது பேரவையினால் அல்லது சபைக்கு அல்லது பேரவைக்கு எதிராக தொடுக் கப்பட்ட வழக்குகளும், வழக்குநடபடி களுமாகக் கருதப்பட்டு, அதற்கிணங்க தொடரப்பட்டு, முடிவுறுத்தப்படுதல் வேண்டும் ;

(எ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற் போந்த நாளன்று பதவி வகிக்கும் அணுசக்தி அதிகாரசபையின் அலுவலர்களும் வேலையாட்களும், சம்பந்தப்பட்ட அலுவலரினது அல்லது சேவையாளரினது விடயத்திற்கேற்ப, சபையினது அல்லது பேரவையினது சம்மதத்துடன், அணுசக்தி அதிகார சபையில் அவர்களுடைய தொழில் வாசகங்களைவிட சாதகமான விடயத் தில் குறையாத வகையிலான வாசகங் களின் மீது நியமிக்கப்பட்ட தேதியி லிருந்து விடயத்திற்கேற்ப சபையின் அல்லது பேரவையின் அலுவலர் களாக அல்லது சேவையாட்களாக கருதப்படுதல் வேண்டும் ;

(ஏ) அணுசக்தி அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது எதிராக ஆக்கப் பட்டு நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று, திருப்தி

செய்யப்படாதிருக்கும் அனைத்து நீதித் தீர்ப்புக்களும் கட்டளைகளும், நியமிக் கப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய நீதித் தீர்ப்பின் அல்லது கட்டளையின் விடயப்பொருள் தொடர்பிலான அல்லது சம்பந்தப்பட்ட பணி இச்சட்டத்தின் கீழ் குறித்தொதுக் கப்பட்டுள்ளவாறு விடயத்திற்கேற்ப சபைக்கு அல்லது பேரவைக்குச் சாதகமாக அல்லது எதிராக அளிக்கப் பட்ட நீதித் தீர்ப்பாக அல்லது கட்டளை யாகக் கருதப்பட்டு, அதற்கிணங்க வலுவுக்குவரப்படலாம்;

(ஐ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற் போந்த நாளன்று உளதாகிய அணு சக்தி அதிகாரசபையின் அனைத்து அக்கறைகளும், உரிமைகளும், சொத்துக்களும், கடப்பாடுகளும், கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, விடயத்திற்கேற்ப அத்தகைய அக்கறை களின், உரிமைகளின், சொத்துக்களின், கடப்பாடுகளின், கடன்களின் மற்றும் பொறுப்புக்களின் விடயப்பொருள் தொடர்பிலான அல்லது சம்பந்தப்பட்ட பணி அல்லது கடமை இச்சட்டத்தின் கீழ் குறித்தொதுக்கப்பட்டவாறு விடயத்திற்கேற்ப, சபையின் அல்லது பேரவையின் அக்கறைகளாக, உரிமை களாக, சொத்துக்களாக, கடப்பாடு களாக, கடன்களாக மற்றும் பொறுப்புக் களாக கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஒ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு நியமித்த தேதிக்கு நேர் முற்போந்த நாளன்று வலுவிலுள்ளதான இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இல்லாதவையுமான அனைத்து ஒழுங்குவிதிகள் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின் மூலம் திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

*1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை செல்லுபடியான தாக்குதலும் மற்றும் விளைவுகளும்.*

**91.** (1) 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் அணுசக்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமமும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலப் பகுதியொன்றுக்கு வலிதான உரிமமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய உரிமம் பெற்றவர் அதன் பின்னர் இச்சட்டத்தின்கீழ் ஒரு செயல்முறையைத் தொடர்ந்து நடாத்துவதற்கு விரும்புகின்றவிடத்து, அத்தகைய ஆறு மாத காலப்பகுதி முடிவடையும் தேதிக்கு முன்னர் ஒரு மாதத்திற்குக் குறையாது அந்நோக்கத்துக்கென இச்சட்டத்தின் கீழ் பேரவைக்குத் தோதான விண்ணப்பமொன்றைச் செய்யத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னராக, 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் மீது ஒரு செயற்பாடொன்றில் அல்லது செயல்முறையில் ஈடுபட்டுள்ள ஆள் எவரும், நியமிக்கப்பட்ட தேதிக்கு பின்னர் அத்தகைய செயற்பாட்டை அல்லது செயல்முறையைச் செய்யாதொழிய அல்லது தொடராதிருக்க விரும்பினால், அவர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆறு மாத காலங்களின் முடிவுக்கு

முன்னர் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்தில் அத்தகைய நிகழ்வுபற்றி பேரவைக்கு அறிவிக்கத் தேவைப் படுத்துதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (3) ஆம், மற்றும் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அதற்கும், அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாகுதலும் வேண்டும்.

**அட்டவணை**

(பிரிவுகள் 6(4) மற்றும் 14(4))

**சபையினதும், பேரவையினதும் உறுப்பினர்கள் தொடர்பிலான ஏற்பாடுகள்**

(1) ஆள் ஒருவர்:-

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக, ஒரு மாகாண சபை உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராக ஆகவிருந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையாகவிருப்பதற்கு இல்லாதொழிந்தால்;

(இ) ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது பொறுப்புவிடுவிக்கப்படாத வங்குறோத்துக்காரர் என வெளிப்படுத்தப்பட்டால்;

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவில் உள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப் பட்டால்;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் சட்டநீதி மன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால்;

(ஊ) (i) பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்ட நேரத்தில் ஏலவே பேரவையின் உறுப்பினரொருவ ராகவிருப்பின்; அல்லது

(ii) சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்ட நேரத்தில் ஏலவே பேரவையின் உறுப்பினரொருவ ராகவிருப்பின்; அல்லது

(எ) பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் விடயத்தில், பேரவையின் பணிகளும், கடமைகளும்

அக்கறைகளுடன் முரண்பட்டு அல்லது முரண்படுவதற்கான சாத்தியம் உள்ளதாகவிருப்பின்,

அத்தகைய ஆள் சபையின் அல்லது பேரவையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு தொடர்ந்து இருப்பதற்குத் தகமையுடையவராதல் ஆகாது.

(2) அமைச்சரானவர் -

(அ) இவ்வட்டவணையின் (1) ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள எவையேனும் தகைமையீனங்களுக்கு அமைந்தவராக இருக்குமிடத்து;

(ஆ) அமைச்சரின் அபிப்பிராயப்படி, அத்தகைய உறுப்பினர் ஏதேனும் உடற் தகைமையின் அல்லது சித்தசுவாதீனமற்றமை காரணமாக அவரது அல்லது அவளது கடமைகளை நிரந்தரமாக புரிய இல்லாதவராக இருக்குமிடத்து; அல்லது

(இ) அமைச்சரின் அபிப்பிராயப்படி, விடயத்திற்கேற்ப சபையை அல்லது பேரவையை அவமதிப்புக்குள்ளாக்கும் சாத்தியம் கொண்ட ஏதேனும் செயலைச் செய்தால்,

அவரை சபையின் அல்லது பேரவையின் உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) சபையின் அல்லது பேரவையின் தவிசாளர் அல்லது வேறு எவரேனும் உறுப்பினர், அத்தகைய பதவியிலிருந்து அமைச்சருக்கு அதற்கென முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் விலகிக் கொள்ளலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகல் அமைச்சர் எழுத்தில் ஏற்றுக் கொள்ளும் தேதியிலிருந்து பயனுறுவதாதல் வேண்டும்.

(4) சபையின் அல்லது பேரவையின் உறுப்பினர் பதவியானது -

(அ) அவர் அல்லது அவள் மரணமடைந்தால்;

(ஆ) அத்தகைய உறுப்பினர் அத்தகைய பதவியிலிருந்து விலகுவதற்கான அவரது முன்னம் பற்றி எழுத்தில் அமைச்சருக்கு அறிவித்த தேதியிலிருந்து ஏழு நாட்கள் முடிவடைவதன் மேலும் அத்துடன் எழுத்தில் அமைச்சரால் பதவிவிலகலை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மீதும்;

(இ) அத்தகைய உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மேல்;

(ஈ) அத்தகைய உறுப்பினர், விடயத்திற்கேற்ப, சபையின் அல்லது பேரவையின் இரண்டு தொடர்ச்சியான கூட்டங்களிலிருந்து, சபையின் அல்லது பேரவையின் தவிசாளரின் முன் அறிவித்தலின்றி வருகை தராதிருந்தால்; அல்லது

(உ) உறுப்பினரொருவராக அவரின் அல்லது அவளின் பதவிக் காலம் முடிவுறுவதன் மேல்,

வறிதானதாதல் வேண்டும்.

(5) சபையின் அல்லது பேரவையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவி வறிதாகும் பட்சத்தில் அமைச்சர், 6(1) ஆம் பிரிவின் அல்லது 13(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, வேறு ஓர் ஆளை அவர் எந்த உறுப்பினரைத் தொடர்ந்து பதவிக்கு அடுத்துறுகின்றாரோ, அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு, பதவி வகிப்பதற்கென, நியமித்தல் வேண்டும்.

(6) (அ) சபையின் அல்லது பேரவையின் உறுப்பினர் ஒருவர் சுகவீனம், இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அவனது அவளது கடமைகளை தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து, அமைச்சர், சபையின் அல்லது பேரவையின் விதப்புரையின் மீது, அத்தகைய உறுப்பினர் இல்லாதிருக்கும் போது அவருக்கு பதிலாகச் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம் ;

(ஆ) சபையின் அல்லது பேரவையின் தவிசாளர் சுகவீனம், இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்தினால் தமது கடமைகளை நிறைவேற்ற தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து அமைச்சர் அத்தகைய தவிசாளர் இல்லாதிருக்கும் போது அவருக்குப் பதிலாக செயலாற்றுவதற்கென சபையின் அல்லது பேரவையின் வேறோர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(7) சபையின் அல்லது பேரவையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(8) (அ) விடயத்திற்கேற்ப சபை அல்லது பேரவை, ஆகக் குறைந்தது மாதத்துக்கொரு முறையேனும் அல்லது அவசியமானவாறு அடிக்கடி கூட்டுதல் வேண்டும் ;

(ஆ) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களும், பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களும் ஆகுதல் வேண்டும் ;

(இ) சபையின் அல்லது பேரவையின் தவிசாளர் சபையின் அல்லது பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டத்தின் போது தவிசாளர் இல்லாதிருக்கும் போது சமுகமளித்திருக்கும் உறுப்பினர் சமுகமளித்துள்ள உறுப்பினரிடையேயிருந்து ஓர் உறுப்பினரை அத்தகைய கூட்டத்தின்போது தலைமைதாங்கவெனத் தெரிந்தெடுத்தல் வேண்டும் ;

(ஈ) சபையின் அல்லது பேரவையின் ஏதேனும் கூட்டத்தின்போது தலைமை தாங்கும் தவிசாளர் அல்லது ஆள் அவரது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதல் வேண்டும் ;

(உ) சபை அல்லது பேரவை அதன் கூட்டங்கள் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களைக் கையாளுதல் என்பன பற்றிய நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(9) சபை அல்லது பேரவையின் இலச்சினையானது -

(அ) சபையினால் அல்லது பேரவையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபை அல்லது பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(இ) சபை அல்லது பேரவை தீர்மானிக்கின்றவாறான அத்த கைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(ஈ) சபையின் அல்லது பேரவையின் அனுமதியுடன் தவிரவும் அத்தகைய சபையின் அல்லது பேரவையின் தவிசாளரும் ஏனைய ஓர் உறுப்பினரும் முன்னிலையிலும் அன்றியும் ஏதேனும் ஆவணத்தில் அல்லது சாதனத்தில் பொறிக்கப் படுதல் ஆகாது அவர்கள் இருவரும் தாம் சமுகமளித்திருந் தமைக்கு அடையாளமாக அந்த ஆவணத்தில் அல்லது சாதனத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் *15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்